உ

கணபதிதுணை.

வித்யாபாநு.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக"—திருக்குறள்.

தொகுதி	பிங்களஸ்ரீ கார்த்திகைமீ	பகுதி
9	December 1917.	11

ஜப்பான் தேசத்துக் கல்விமுறை.

ஜப்பான் தேசத்தில் மேனாட்டுமுறையாகப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்திப் படிப்பிக்க ஆரம்பித்தது, தற்காலத்து ஜப்பான் சக்கரவர்த்தி அரசாட்சிக்கு வந்தபிறகுதான். இது ஆரம்பித்துச் சுமார் 30-வருஷங்களாயின. இதற்கு முற்காலங்களில், இந்தியப்படிப்பு முறைபோலவே, புரோஹிதர்களாலேயே படிப்புச் சொல்லிக்கொடுக்கப்பட்டு வந்தது. சீனபாஷையைக்கற்பிப்பதுடன் புத்தமத சூத்திரங்களும் இதர மதவிஷயங்களும் கற்பிக்கப்பட்டுவந்தன. சிலகாலங்களில் கன்பூஷியன் புராணங்களும் ஜப்பானிய சரித்திரங்களும் பிரதானங்களாகவு மிருந்தன.

ஆரம்பப்படிப்பு முறையானது சீனபாஷையின் எழுத்துக்களையும் கணக்குகளையும் கற்பிக்கும் அளவிலேயே நின்றிருந்தது. கணக்கும் வைத்தியமும் சொல்லிக்கொடுக்கப்பட்ட சிலபள்ளிக்கூடங்கள் தவிர வேறுபள்ளிக்கூடங்கள் ஏற்பட்டிருக்கவில்லை. பிறதேசத்து ஆசாரங்களை அநுஷ்டிப்பது தோஷமாகவே எண்ணப்பட்டு வந்தது. கிறிஸ்து முதலிய இதரதேசத்து ஆசாரங்களில் பழகினவர்களும் பிறதேசப்பிரயாணம் செய்தவர்களும் தண்டிக்கப்பட்டு வந்தார்களென்றும் தெரியவருகிறது.

இவை யெல்லாம் இப்போது மாறுபட்டு வந்திருக்கின்றன. 30 வருஷங்களுக்கு முன் மாறுபாட்டைக் கண்டித்துக் கொண்டிருந்தவர்களும் அவர்களது வம்சத்தார்களும் இப்போது நவீனமுறையை முன்னுக்குக் கொண்டுவருவதில் உத்ஸாகங்கொண்டு உழைத்து வருகிறார்கள். "கல்வியே கருந்தனம்." "கல்வியே சிற்றுயிர்க்குற்றதுணை" "கல்வி யழகே யழகு" என்னும் செவ்வனே தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

ஜப்பானிய வித்யா இலாகா அதிகாரிகள் ஜப்பானிய மாணவர்களின் மனதையெல்லாம் மேனாட்டார் மனம்போலத் திருப்பிவரக் கூடிய முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். வித்யா சட்டத்தின் முதற்பிரசுரமானது மிக்காடோ அவர்களது கட்டளையாகவே இருந்தது. அது பின்வரும்:—

" உலக வாழ்க்கையின் நித்தியசரிமுதல் அரசாங்க உத்யோகஸ்தர்களாகவும் குடித்தனக்காரர்களாகவும் வியாபாரிகளாகவும் போர்வீரர்களாகவும் வைத்யர்களாகவும் இவை போன்ற மற்றும் வேறு தொழிலாளிகளாகவும் வரவேண்டிய பக்குவம் வரையில் பள்ளிக்கூடங்களிலேயே கற்பிக்கப்பெறல்வேண்டும். ஒரு சிறிய கிராமத்திலே ஒரு குடும்பமேனும், ஒரு குடும்பத்திலே ஒருவரேனும் படிப்பில்லாதவராக இருக்கவேபடாது, " என்பதாம்.

இதர தேசங்களில் அதாவது மேனாடுகளிற் படிப்பிக்கும் முறையெதுவோ அதனையே முதன் முதல் தங்கள்நாட்டுக்கும் முறையாக வேண்டுமென்று அரசாங்கத்தாரும் உத்தரவு செய்து விட்டார்கள். இதன்நிமித்தம் அமெரிக்காவிலிருந்தும் ஐரோப்பாவிலிருந்தும் போதகாசிரியர்கள் வருவிக்கப் பெற்றார்கள். ஜப்பானிய மாணவர்களும் மேனாடுகட்கு அனுப்பப்பெற்றார்கள். அதற்காகவென்றே, இதர பாஷைகளைக்கற்பிக்கும் பள்ளிக்கூடங்களும் அனேகம் ஏற்படுத்தப்பெற்றன. வியாபாரம் முதலிய அனுபவத் தொழில்களைக் கற்பிப்பதற்காகவேண்டிய சாஸ்திர சம்பந்தமான அவசியச் சாமான்கள் பள்ளிக்கூடங்களில் ஆயத்தம் செய்யப்பெற

றன. 1877-ம் வருஷத்தில் ராஜதானியாகிய டோக்கியோவில் இப்போதிருக்கும் ராஜாங்க ஸர்வகலாசங்கமானது இரண்டு கல்லூரிகளுடன் [காலேஜ்] ஆரம்பிக்கப்பெற்றது. ஆனல் வித்யாசட்டங்கள் அடிக்கடி மாற்றப்பட்டுக்கொண்டேவந்தன. அப்படியான மாறுபாடுகளின் கொள்கைகள் சில பின்வரும்:— “ ஆத்மகுணத்தை விருத்திசெய்தல், ராஜபக்தி தேசபக்தி இவற்றில் உத்வேகத்தை யுண்டுபண்ணுகல், அவசியத்தொழில்களில் உடனே நுழையக்கூடிய அறிவு ” இவைகளே. தேகம் தேசம் இவற்றின் ஒழுங்கையும் குணத்தையும் விருத்திசெய்யும்பொருட்டு சைனுவத்திற் பழக்கப்படும் மாதிரியான தேகப்பயிற்சியும் பள்ளிக்கூடங்களிலிருந்தே பழக்கம்செய்விக்கப்பட்டுவந்தன. ஒருகாலத்தில் வித்யாவிஷயமாகக் கூடிய ஒரு பெரிய கூட்டத்தில் மிகாடோ சக்கரவர்த்தி பேசியதிற் பின்வரும் சில விஷயங்கள் வற்புறுத்தப்பெற்றன. “ மாணவர்கள், தங்கள் படிப்பு விஷயங்களை நன்றாகக்கவனித்து அவற்றில் நன்றாகத்தேறிவந்து, தேசத்தில் நடைபெறவேண்டிய எந்தவிதமான அவசியத்தொழிலுக்கும் அரசாங்கத்தாரால் அழைக்கப்பட்டபோது ஆயத்தர்களாக இருக்கவேண்டியது. தங்களது யுக்தி புக்திகளைச் சீர்திருத்திக்கொள்ளும் முறையிலும் குணங்களை மணப்படுத்திக் கொள்ளும் முறையிலும் பின்வாங்கி யிருக்கப்படாது. மேற்கண்ட விஷயங்களில் அரசராவது அவரது குடிகளில் யாருமாவது குறுக்கிடக்கூடாது ” என்பதாம். இக்கருத்துகள் தெருத்தெருவாகப் பிரசுரம் செய்யப்பெற்றன. இதனுல் போதகாசிரியர்களும் மாணவர்களும் தங்கள் தங்கள் கடமைகளைச்செலுத்திச் தேசத்தை முன்னுக்குக் கொண்டுவருவதில் முதன்மை பெற்றவர்களானர்கள்.

ஜப்பான் தேசத்தில் வித்யா இலாகாவைச்சீர்திருத்தவேண்டிய முயற்சிகள் அரசாங்கத்தாரலேயே அடிக்கடி கவனிக்கப்பெற்று வந்தன. வித்யா இலாகாவுக்கென்றே தனி மந்திரியொருவர் ஏற்பாடு செய்யப்பெற்றார். படிப்பையும் படிப்புமுறையையும் அடிக்கடி கவனித்து விசாரித்துவருவதற்காக அவருக்கு ஒருஉதவிமந்திரியும் நிய

மிக்கப்பட்டுளார். ஆரம்பப்படிப்பும் அவசியப்படிப்பும் திருப்திகரமானஒழுங்குடன் நடைபெற்று வரும்படியான ஏற்பாடு நன்றாகச் செய்யப்பட்டிருக்கிறது. அதிலிருந்தே வியாபாரமுறை தொழில்முறைக்குவேண்டிய ஒழுங்குகள் ஆரம்பிக்கப்பெற்றன. உயர்தரமான அனுபவத் தொழில் முறைக்கும் சாஸ்திரப்படிப்புமுறைக்குமென்றே சர்வகலாசங்க மொன்றும் இருக்கிறது. இதுவன்றி உயர்தர வியாபாரமுறைகள் தொழில்முறைகள் இவற்றுக்கு வேண்டிய உயர்தரப்பள்ளிக் கூடங்களும் ஏற்பட்டிருக்கின்றன. உயர்தர உபாத்திமைப்பள்ளிக்கூடங்களும் சாதாரண உபாத்திமைப் பள்ளிக்கூடங்களும் ஏற்பட்டிருக்கின்றன. உயர்தரப்பெண்பாடசாலைகளும், சித்திரம் சங்கீதம் முதலியவற்றுக்குப் பாடசாலைகளும் ஏற்படுத்தப் பெற்றிருக்கின்றன. ஊமை குருடர் இவர்கட்கும் பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. 1895-ம் வருஷத்தில், மாகாணஜனங்களின் ஆதரவின்பேரிலும் தனியே ஒவ்வொருவர் பேரிலுமாகப் பள்ளிக்கூடங்கள் ஆயிரக்கணக்காக ஏற்பட்டு விட்டன. இவைகளில் ஜப்பான் சீனம் முதலிய பாஷைகளும், இங்கிலீஷ் ப்ரெஞ்ச் ஜர்மன் ருஷியன் முதலிய அன்னியபாஷைகளும், சட்டம் வைத்யம் தத்வ வுணர்ச்சி மாலுமித்தொழில் கணக்குவைப்பு வியாபாரம் அரசாங்கமுறை முதலிய தொழில்முறைகளும் கற்பிக்கப்படுகின்றன. இவைகளில் ராஜதானியாகிய டோகியோவில் இருக்கும் பள்ளிக்கூடங்களில்ஆயிரத்துக்குமேல் மாணவர்கள்படித்துவருகிறார்கள். கீழ்க் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையானது அந்நாட்டில் நடைபெற்றுவரும் கல்விமுறையின் பலத்தை நன்றாக விவரித்துக் காட்டும் என்று எண்ணுகிறேன்.

கீழ்த்தரப்பாடசாலைகள் ————		26, 631.
	இவற்றுள் ஆண்கள்	2,435,223.
	பெண்கள்	1,235,122
	ஆக மொத்தம்	3,670,345

மாணவர்கள் படித்து வருகிறார்கள்.

தொழில்பயிலும் மாணவர்க்குரிய பள்ளிக்கூடங்கள்	10	மாணவர்	1117.
தொழிலுக்குரிய சாஸ்திரப் பள்ளிக்கூடங்கள்	97	,,	14,956.
இவைகட்கு உதவிப்பள்ளிக்கூடங்கள்	55	,,	3,327.
உயர்தரப்பள்ளிக்கூடங்கள்	6	,,	4,109.
நடுத்தரபள்ளிக்கூடங்கள்	96	,,	30,871.
உபாத்தியாயர் பள்ளிக்கூடங்கள்	49	,,	7,734.
உயர்தரப்பெண்பள்ளிக்கூடங்கள்	15	,,	2897.
தாவரசாஸ்திரப்பாடசாலைகள்	219	,,	17,428.
ஸர்வகலாசாலைகள்	2	,,	1,620.
தனிப்பள்ளிக்கூடங்கள்	1,263	,,	64,948.

கீழ்த்தரப்பாடசாலைத் தொகையில் 3,976 பள்ளிக்கூடங்கள் தையல் கைத்தொழில் விவசாயம் வியாபாரம் முதலியவற்றைச் சொல்லிக்கொடுக்கின்றன. ஒழுங்காகவும் நடத்தப்பெற்றுவருகின்றன. அவைகளிலிருந்து நடுத்தர உயர்தரப் பள்ளிக்கூடங்களிற் போய்ச் சேரும்படியும் மாணவர்கள் கற்பிக்கப்படுகிறார்கள். மாணவர்கட்கும் பொதுஜனங்கட்கும் படிப்பில் ஆசையையும் விருத்தியையும் கொடுத்துதவுவதற்காக வேண்டியே நிறைந்த அவசியமான புஸ்தகங்களுடன் கூடிய புஸ்தகசாலைகளும் அநேகம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

டோகியோ கல்விச்சங்கம் என்னும் ஒருசங்கம் ராஜாங்கத்தாரால் ஸ்தாபிக்கப்பட்டு, விசேஷமாகப் பொதுஜனப்படிப்பைவிருத்தி செய்து கொண்டுவருகிறது. அங்கே வயதுசென்றவர்களும் படிப்பில் முதிர்ந்தவர்களும் உலகஅநுபவமுடையவர்களுமானவர்களே அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். அவர்கள் பலசமயங்களிலும் கூட்டங்கள் கூட்டி உபந்யாஸங்கள் செய்துவருகிறார்கள்.

வித்யா இலாகா மந்திரியின் மேற்பார்வையில் இருக்கும் இந்தப் பள்ளிக்கூடங்கள், பொதுஜன மாணவர்கட்காக ஏற்பட்டிருப்பன தவிர, பிரபுக்களுக்காகவும் மேன்மக்களுக்காகவுமென்றே பள்ளிக்

கூடங்கள் ஏற்படுத்தப்பெற்று ராஜகுடும்பத்தாராலேயே மேற்பார்வை செய்யப்பெற்று வருகின்றன. ஒரு ராணுவக் கல்லூரியும் ஒரு ராணுவச்சங்கமும், யுத்தாப்பியாசிகட்காக ராணுவக்கீழ்த்தரக் கலாசாலைகளும் படைவகுப்பு முறைக்காகக் கலாசாலைகளும் ஏற்படுத்தப்பெற்று ராணுவ இலாகா மந்திரியின் மேற்பார்வையில் நடத்தப்பெற்றுவருகின்றன. ஒரு மாலுமிக்கல்லூரியும் மாலுமிச்சங்கமும் மாலுமிவைத்தியக்கல்லூரியும் இவற்றுக்கு உதவியான கீழ்த்தரப் பள்ளிக்கூடங்களும் ஏற்படுத்தப்பெற்றுக் கப்பல்இலாகா மந்திரியால் மேற்பார்க்கப்பட்டு வருகின்றன.

இப்படி அறிவுவளர்ச்சிக்காகவும் தேசாபிமானத்துக்காகவும் ராஜபக்திக்காகவும் உத்வேகங்களை யுண்டுபண்ணிவிட அரசாங்கத்தாரும் இதரபிரபுக்களும் தலைவர்களும் தங்களது கடமைஇவைகள் தாமென்று ஊக்கங்காட்டி வருகின்றார்கள், அவற்றுக்காகப் பொருள் முதலியவற்றைத் தியாகமும் செய்துவருகிறார்கள்.

இனி, ஜப்பானை நோக்க நம்மிந்தியா எத்தனை விஷயங்களிற் குறைவடைந்திருக்கிறது என்பதைச் சற்று ஆலோசிப்போமாக:—

1. ஜப்பான்தேசத்தில் ஆரம்பப்படிப்புமுறையானது 14-வது வயது வரையிலும் கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறது.

2. பெரும்பாலான ஆரம்பப்பள்ளிக்கூடங்களில் தொழில்கள் அனுபவத்தில் வரும்படி பயிற்றப்பட்டு வருகின்றன. அவைகள்:- கைத்தொழில் விவசாயம் வியாபாரம் என்பன.

3. ஜனத்தொகையின் அளவை உத்தேசிக்கும்போது இந்தியாவைக் காட்டிலும் ஜப்பானில் தொழிற்கல்விச்சாலைகளும் வியாபாரக்கல்விச்சாலைகளும் அதிகரித்திருக்கின்றன.

4. உயர்தரத்தொழின்முறைகளும் வியாபார முறைகளும் பிரதானங்களாகப் பயிற்றப்பட்டு வருகின்றன.

5. டோகியோவில் நடைபெற்றுவரும் வியாபாரக் கல்விச்சாலையில் இங்கிலீஷ் ஜர்மன் ப்ரெஞ்சு ஸ்பானிஷ் சீனம் ருஷியா முதல

விய பாஷைகளிலும் போதிக்கிறார்கள். இதனால் ஜப்பானிய மாண வர் அவ்வெல்லா நாடுகளிலும்சென்று வியாபாரம் நடத்திக்கொண்டு வர அநுகூலம் கிடைக்கிறது.

6. சர்வகலாசாலைகளிலும் கூட அநுபவரஸாயன சாஸ்திரம் கட்டிடவேலை சுரங்கவேலை முதலிய தொழில்கள் அநுபவமுறை யாகவே கற்பிக்கப்பெறுகின்றன. இதனால் மாணவர்கள் பள்ளிக் கூடத்தைவிட்டு வெளிவந்தவுடனேயே அவ்வத் தொழில்களில் நுழைந்து உத்யோகங்களை வகிக்கத்தக்கவர்களாகிறார்கள்.

7. எல்லாப்பள்ளிக்கூடப் பிள்ளைகளும் போர்வீரர்க்குரிய சட்டைகளுடனேபள்ளிக்கூடங்கட்குச்சென்றுவர ஏற்பாடுசெய்திரு க்கிறார்கள். ஆண்பிள்ளைகளெல்லாரும் ராணுவப்பயிற்சியில் அப்ய சிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

8. யாதொரு வேறுபாடுமின்றியே மாணவர்க்கு ஒழுக்க முறை கற்பிக்கப்பட்டுவருகின்றது.

9. மாணவர்கள் எப்போதும் எங்கும் சந்தோஷகரமாகவேநட த்தப் பெறுகிறார்கள். இதன்றி, கடமை ராஜபக்தி தேசபக்தி மனிதர் கூட்டுறவு இவற்றில் நன்றாகவும் திருப்திகரமாகவும் ஒழுங் காகவும் கட்டாயமாகவும் கற்பிக்கப்பெற்று வருகிறார்கள்.

10. பெண்கல்வி நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வருகி றது. ஜப்பானில் 1,500,000 பெண்கள் கல்விபயின்றுவருகிறார்கள். இந்தியாவிலோ 400,000 பெண்கள்தாம் படித்து வருகிறார்கள்.

மாணவர்க்குரிய சௌகரியங்கள்.

ஏழைமாணவர்கட்குப் பள்ளிக்கூடங்களில் வேண்டிய சௌகரி யங்கள் செய்துகொடுக்கிறார்கள். ஒவ்வொரு மாணவனுடைய சாப் பாட்டுச் செலவு மாதத்துக்கு இந்திய நாணயத்தில் ரூ. 7 அல்லது 9-க்கு அதிகப்படுவதில்லை. ஒருமாணவனை ஒருசாதாரணப் பள்ளிக் கூடத்திருந்து கல்விபயிற்றச் சகலவிதச்செலவும் சேர்ந்து ரூபாய் 9 அல்லது 15 க்கு அதிகப்படுவதில்லை. ஒருநடுத்தரப் பள்ளிக் கூடத்திலேயோ அது ரூபாய் 14 அல்லது 20 க்கு அதிகப்படுவ தில்லை. டோகியோ அரசாங்கத்துக் கல்விச்சாலையிலோஅது ரூபாய்

16 அல்லது 22க்கு அதிகப்படுவதில்லை. இந்தச் செலவு சாப்பாடு குடியிருப்பறை புஸ்தகங்கள் மற்றும் இதரசில்லரைச் செலவுகளும் சேர்ந்ததுமேயாகும். ஆடையின் செலவு அவரவர்களைச் சேர்ந்தது. இந்தியாவிலோ இச்செலவுகள் பள்ளிக்கூடச் சம்பளத்தைத்தான் எட்டுகிறதில்லை. அதிலும் சர்வகலாசங்கப்பரீக்ஷைகளிற் படிக்கும் மாணவர்க்கு, அச்சம்பளச் செலவும் இத்தொகைக்கு அதிகப்படுகிறது.

டோகியோ, கியடோ என்னும் இப்பட்டணங்களிலுள்ள சர்வகலாசங்கங்களிற் படிக்கும் படிப்பிக்கும் மாணவரும் உபாத்தியாயர்களும் யாதொருவிதமான புஸ்தகமும் விலைக்கு வாங்கவேண்டியது அவசியமேயில்லை. போதகாசிரியர்கள் புஸ்தகசாலைகளிலிருந்து தேவையான புஸ்தகங்களைத் தருவித்துக்கொண்டு மாணவர்களைக் குறிப்பெழுதிக் கொள்ளும்படி செய்கிறார்கள். அந்தச் சர்வகலாசங்கமானது, சிற்சில சமயங்களில் மாணவர்களைத் தொழிற்சாலைகட்கும் உத்தியோகசாலைகட்கும் அழைத்துச்சென்று நேரிற் பார்த்து வரும் அநுபவஞானத்தையும் கற்பிக்கிறது. மாணவர்கள் பள்ளிக்கூடத்தை விட்டு நின்றவுடன் சோம்பேறிகளாகச் சுற்றுதல்களும் இருப்பதில்லை. அவர்கட்கு உடனே உத்தியோகம் கொடுக்கப்படுகின்றன. சர்வகலாசங்கங்களில் அநுபவமுறையாகவே தொழிற்கல்வியும் விவசாயக்கல்வியும் வியாபாரக் கல்வியும் கற்பிக்கப்பெற்று மாணவர்கள் வெளிவந்துகொண்டிருப்பதால், அத்தகையவர்களையே எல்லா உத்தியோகசாலைகளும் விவசாயசாலைகளும் வியாபாரசாலைகளும் விரும்பி நாடுகின்றன. சில புத்திநுட்பமுள்ள மாணவர்க்கு அவர்கள் தங்கள் படிப்புமுறையை நிறுத்துவதற்கு முன்னமேயே சாலைகளில் உத்தியோகங்கள் அமைத்துவைக்கப்பெறுகின்றன. அந்தத்தேசத்தில் தேசாபிமானம் எவ்வளவு உயர்ந்த நிலையில் இருக்கிறது பாருங்கள்.

போதகாசிரியர்கள்.

உபாத்தியாயர்களும் உபந்யாசகர்களும் தேசாபிமான நோக்கத்துடன் ஸ்வல்ப சம்பளத்திற்கே உழைத்து வருகிறார்கள். தங்க

ளைப்பெற்ற தேர்ச்சியுடையவர்கள் வெவ்வேறு முறைகளைப் பின்பற்றி வருவாய்மிக்குடையதாக விளங்கினபோதிலும் தாங்கள் அதற்கு விருப்பேனும் அவரிடத்தில் வெறுப்பேனும் கொள்ளாமல் தேசஊழியத்தையே கோரினவர்களாக உழைத்து வருகிறார்கள். அரசாங்கத்தில் உத்தியோகத்துக்கு என்று இவர்களையழைத்தபோதிலும் தேசவூழியத்தை விட்டுப்போக அவர்கள் இஷ்டப்படுவதில்லை. இது எவ்வளவு மேலான நினைவு பாருங்கள். இவர்களுடைய லௌகிக நினைவுகள் எல்லாம் ஐரோப்பிய நினைவே. வீட்டுக்குப்புறமான இடங்களிற் சஞ்சரிக்கும்போதெல்லாம் ஐரோப்பிய உடையே கொண்டவர்களேனும் வீட்டில் இருக்கும்போது தேசவுடையே கொண்டிருக்கிறார்கள். வீட்டில், ஐரோப்பியர்களைப்போலத் தட்டு முட்டுச் சாமான்களும் அவற்றுக்குவேண்டிய செலவுகளும் அமையப்பெறாதவரேனும் வீடுகள் சுத்தமாகவும் அழகாகவும் சுதேசஆசாரத்தைக் காண்பிக்கக் கூடியனவாகவும் ஒழுங்காகவும் வைக்கப்பட்டிருக்கின்றன. டோகியோ சர்வகலாசங்கத்தில் உபந்யாசகர்கட்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 150 முதல் 250 வரையும், சக்கிர்வாஹகர்கட்கு ரூபாய் 200 முதல் 300 வரையும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. உபாத்தியாயர்களுக்கும் இதற்கு ஏற்றபடியே தருகிறார்கள். சாதாரணப்பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்கட்குச் சம்பளம் மிக்க குறைவாகத்தான் கொடுக்கப்படுகின்றது. சாதாரண ஆரம்பப் பள்ளிக்கூட உபாத்தியாயர்களின் தொகை மொத்தத்தில் 41,000. இருக்கின்றதேனும் இவர்களில் 2000 பெயர்கள் மாதமொன்றுக்கு ரூபாய் 15-க்கும் குறைந்தவர்களாகவும், 5000 பெயர்கள் ரூபாய் 8-க்குக் குறைந்தவர்களாகவும் இருக்கிறார்கள். கல்வியிலாகா மந்திரியுங்கூடத் தமது அத்தனை கல்வித்திறத்திலும் தேசாபிமான நோக்கத்தை முன்னிட்டு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 750-க்குமேல் வாங்கப் பிரியப்படவில்லை.

ஜப்பானியர்களை உலகஅநுபவத்தில் உயர்ந்து நடந்துவருபவர் என்று சொல்வதற்கு யாதொரு தடையுமில்லை. லௌகிகத்திற் சிறந்த முன்னேற்றத்தை யடையவேண்டிய எவ்வித முயற்சியும் அங்கே நடைபெற்றுவருகின்றன. அந்நாடு மேனாட்டுமுறையை யநுசரித்துத் தொழின்முறைகளில் முன்னேறிவருகின்றது.

நம்மிந்தியரே, மேனாட்டு அரசாங்கத்தைப் பெற்றிருந்தபோதிலும் தொழின்முறை முதலிய லௌகிகங்களிற் பின்னிறங்கி யிருக்கிறார்கள். நாகரிகத்திற் சிறந்தவர்களென்று கர்விக்கும் ஆங்கிலர்களே நமக்கு எவ்விதத்திலும் தலைவராக இருந்தும் நம்மவர்கள் தற்கால நாகரிகத்தில் முன்னேறிவரக் காணோம். அடிமைத்தன்மை யுலக மெங்கும் இருக்கிறதென்று உபந்யஸித்துவரும் அவர்களே நமக்குத் தலைவர்களாக அமையப்பெற்றிருந்தும் நம்மவர்களுடைய அடிமைத்தனம் நீங்காதிருப்பதுடன் விருத்தி யடைந்துகொண்டும் வருகின்றது. அடிமைத்தனம் நீங்க வேண்டிய வழியில் முயன்றால் அது கலக்கத்தை யுண்டுபண்ணிவிடுகிறது. லௌகிகப்ரவ்ருத்தியில் முன்னேறவேண்டுமானால், தற்காலத்துக்கு ஏற்றபடி சில மேனாட்டு முறைகளையும் அங்கீகரிக்கவேண்டுவது அவசியம்தான். பாரலௌகிகத்தில் மேனாட்டுமுறை நமக்குக் கொஞ்சமேனும் உதவியற்றது தான். அதன்விருத்திக்கு அதன் உதவியை நாம் ஒருநாளும் நாட வேண்டுவதில்லை. ஆனால் அதன் முறைகள் ஒரு தேசத்தைச் செல்வத்தை வளர்ப்பதற்கேற்ற வழிகளைக் காட்டுகின்றன. நமதுநாட்களில் நடந்தேறும் ஒவ்வொரு நாளையின் பழக்கமும் விதியினாலோ அன்றி மதியினாலோ இதனையே வற்புறுத்திச் செல்லுகின்றது. நமது ராஜாங்கத் தலைவர்கள் அம்முயற்சியில் நம்மைச் செலுத்த வரவில்லையே என்ற எண்ணத்துடன் சோம்பியிராமல் நமது தேசத்தலைவர்களை முற்கொண்டேனும் முன்னேற வேண்டும். தற்காலப்பழக்கங்களைச் சற்றும் கவனியாதிருப்பது நமது முன்னேற்றத்துக் கென்று நமக்குக் கடவுள் கொடுத்த காலத்தைத் தவற விட்டதேயாகும். யுக்தியும் முயற்சியுமே தேசமுன்னேற்றத்துக்கு முக்கிய உதவிகளாகும். இவ்விரண்டும் அவ்வக்கால நாகரிகத்தைப் பின்பற்றியே ஊக்கங்கொள்கின்றன. காலநாகரிகத்துக்கு ஏற்ப அவசிய விஷயங்களில் நாம் நமது மனதைச் செலுத்தாவிடில் யுக்தியும் முயற்சியும் உதவாது நின்றுவிடும். நோக்கும் பொதுநினைவுமே தேசாபிமானத்தை வளர்க்கும். தேசாபிமானம் வளரப்பெறாத ஜனங்களையுடைய எந்தத்தேசமும் எக்காலத்தும் சீரடைந்துள்ளதாக எத்தேசசரித்திரமும் நமக்குச் சொல்கின்றிலது.

பெருமைதங்கிய கர்சன் பிரபு அவர்கள் ஒருசமயம் தமது நீண்ட பிரசங்கத்தின் மத்தியிற் கீழ்வரும் வாக்கியத்தைச் சொல்லி நம்மை ஊக்கியிருக்கிறார்கள்.

"ஒருதேச முன்னேற்றமானது இயற்கையாகவோ கடவுளின் சந்தர்ப்பத்தினாலோ நடந்தேற மாட்டாது; அவ்விரண்டும் நமது இஷ்டத்தையும் கையையுமே எதிர்பார்த்து நிற்கின்றன."

பத்திராதிபர்.

உ

தஞ்சை ஜில்லாச் சிறுவர்கள்.

சென்ற ஐப்பசி மீ ௰௮உ சனிக்கிழமையன்று நடந்த ஊவட்டினம் லிடரரி கிளப்பின் 4-வது வருஷாந்தக் கொண்டாட்டத்திற் கும்பகோணம் கவர்ன்மெண்ட் காலேஜ் பிரின்ஸிபால் மிஸ்டர் ஸ்ட்ராதாம் 'தஞ்சை ஜில்லாச் சிறுவர்கள்' என்ற விஷயத்தைப்பற்றி அருமையான ஓர் உபந்யாசம் செய்தார். அதன் சாராம்சம் பின் வருமாறு:—

பொதுவாய் இந்தியாவைப்பற்றிப் பேசாமல் தஞ்சை ஜில்லாவைக் குறித்துமட்டும் நான் இன்று பேசுவதற்கு ஒரு முக்கியமான காரணமுண்டு. பரீட்சைகளிலாகட்டும், படிப்பிலாகட்டும் தஞ்சை ஜில்லாச் சிறுவர்களே விசேஷ பிரசபல்யம் அடைந்து வருகிறார்கள். அவர்களுக்கு அபார புத்தியும் உண்டென்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் மேனாட்டுச் சிறுவர்களோடு அன்னாரை ஒப்பிட்டுப் பேசுமிடத்து அவர்களிடத்திற் சில வழுக்களிருக்கின்றனவென்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். இதர மாகாணச் சிறுவர்களிடத்திற் காணப்படாத சில கெடுதல்களும் தஞ்சை ஜில்லாச் சிறுவர்களிடத்திற் பொதுவாய்க் காணப்படும். தேகஸ்திதி சம்பந்தப்பட்டவரையில் தஞ்சை ஜில்லாச் சிறுவர்கள் வெகு மோசமென்றே சொல்லவேண்டும். அவர்கள் தேகம் குன்றிப்போயிருப்பதைப் பிரத்தியட்சத்தில் அறிந்துகொள்ளலாம், பிறகொருகாலத்தில் ஒழுங்கான

பிரஜ்ஜைகளாயிருப்பது சாத்தியமாகும்படி. பால்யத்தில் அவர்களுக்குப் பயிற்சிசெய்விக்க யாரும் சிரத்தையெடுத்துக்கொள்வதில்லை. அவர்களுடைய தேகநிலை குன்றிப்போயிருப்பதற்குப் பல காரணங்களிருக்கின்றன. முதலாவது தேகப்பயிற்சியைப்பற்றி அவர்கள் கவலையெடுத்துக்கொள்வதேயில்லை. தேகாப்பியாசத்தை மேனாட்டாரின் வழக்கங்களில் ஒன்றாய்ப் பாவித்து அவர்கள் சும்மாவிருந்துவிடுகிறார்களோவென்று நினைக்கவேண்டியிருக்கிறது. இரண்டாவது பள்ளிக்கூடத்திற் படிக்கும்போது தேகாப்பியாசத்திற்கு இடங்கொடுக்கும்படியான விளையாட்டுகளை இவ்விலாகாவிற் செய்துவருவது போற் பாடசாலைகளிற் கட்டாயமாய் வைப்பதில்லை. இஷ்டப்பட்ட சிலரே இங்கு விளையாட்டுகளிற் கலந்துகொள்ளுகிறார்கள். மூன்றாவது காரணம் என்னவென்றால் இங்குள்ள சிறுவர்கள் வெகு பால்யத்திற் பள்ளிக்கு அனுப்பப்பட்டு அன்னிய பாஷைப் புத்தகங்களை அளவுக்கு மிஞ்சிச் சொல்லிவைக்கப்படுகிறார்கள். அவர்களுடைய தேகஸ்திதி கெட்டுப்போயிருப்பதற்கு மற்றும் சில காரணங்கள் இருக்கின்றன. சுகாதார வசதிகளில்லாத இடங்களிலேயே அன்னார் பெரும்பாலும் பள்ளிக்கூடங்களிலும் வீடுகளிலும் படித்துக் காலத்தைப் போக்குகிறார்கள். அதன் பலனாக இரத்தாசய ரோகங்களுக்கும் கண் நோய், க்ஷயரோகம் முதலானவைகளுக்கும் கடைசியில் ஆளாகிறார்கள். இது நிற்க, பரீக்ஷை நெருங்கிவிடுமே என்ற மனோவியாகுலத்தால் சதாகாலமும் பீடிக்கப்படுகிறார்கள். இவைகளையெல்லாம் நிவர்த்திக்க வித்யா இலாகா அதிகாரிகள் மாணவருக்கு விளையாட்டுகளைக் கட்டாயமாக வைக்கவேண்டும். பள்ளிக்கூடத்துக்கு வெளியில் மாணவர்களின் நடத்தையையும் போக்குவரத்தையும் பெற்றோர்களும் உபாத்தியாயர்களும் கவனித்துவரவேண்டும். வித்தியாநிபுணர்களாய்ப் போக இஷ்டமுள்ளவரைத் தவிர்த்து இதர மாணவர்களை அன்னியபாஷைப் புத்தகங்கள் அளவுக்கு மிஞ்சிப் படிக்கும்படி யூனிவர்ஸிட்டியார் பலவந்தம்பண்ணக்கூடாது. எந்தத் தொழில்களுக்குப்போக விரும்பினாலும் அதற்குப் பிரத்தியேகமான படிப்புத்திட்டத்தை யூனிவர்ஸிடியார் ஏற்படுத்திப் பின்

லேகளை வதைக்கிறார்கள். எப்படியாயினும் அப்பரீக்ஷைகளில் தேறி விடவேண்டுமென்ற ஆசைகொண்டு சிறுவர்கள் உடம்பைக்கூடக் கவனியாமல் உழைத்துத் தேய்ந்துபோகிறார்கள். பால்யத்திற் சிறுவர்கள் பிற்கால வாழ்வுக்கேற்ற சாதனங்களைத் தேடிக்கொள்வதில்லையென்பதையும் இங்குக் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. சமூகசேவகம், பொதுவாழ்வின்பொறுப்பு இவ்விஷயங்களின் வாசனைகூடப் பிள்ளைகளுக்குத் தெரியாதபடி படிப்புச்சொல்லிவைக்கப்படுகிறது. மேனாட்டு யூனிவர்ஸிடிகளைப்போல் மதசம்பந்தமான படிப்பும் இங்குக் கட்டாயமாய்ச் சொல்லிவைக்கப்படுகிறதில்லை. மேனாட்டுக் கல்விமுறைகளை அனுசரித்தாவது ஹிந்துமத சம்பந்தமான பாடங்களைப் பள்ளிகளிற் கட்டாயப்படுத்தவேண்டும். மதப் படிப்பு இல்லாமல் எப்போதும் பொதுப்படிப்புக் கூடாது. சிறுவர்களுக்குச் சுயமாய் நினைக்க வல்லமை உண்டாகும்படி இங்குக் கல்வி போதிக்கப்படவில்லை. ராஜீயவாசனையே கூடாதென்று ஆக்ஞாபிக்கப்பட்டிருப்பது அவர்களுடைய துரதிர்ஷ்டவசமென்றே சொல்ல வேண்டும். பரீக்ஷையின் நிமித்தம் கெட்டுருப்போடுவதே அவர்களுக்கு இயற்கையாய்ப்போய்விட்டது. மேனாட்டுச்சிறுவர்கள் 46-வயதுவரையில் யௌவனத்துக்குரிய சகல உபகரணங்களும் நிரம்பப் படைத்திருக்க இங்குள்ள சிறுவர்களுக்கு 23-வயதானதும் உற்சாகமென்பதே பறந்தோடிப்போகிறது. அதன் பலனாகவே பிற்கால வாழ்வும் அநேகமாய்த் திருப்திகரமாயிருப்பதில்லை. குமாஸ்தா வேலைக்குப் பெரும்பாலர் ஆவல்கொண்டு ஓடுகிறார்கள் சிறுவர்களுக்குப் பற்பல துறைகளைக் காட்டி அவற்றில் ஏதேனுமொன்றில் இறங்கும்படிசெய்வது பெற்றோர்களின கடமைமாத்திரமல்ல. ஜனத் தலைவர்களின் கடமையுமாகும். ஐரோப்பிய யூனிவர்ஸிடிகள் இது விஷயத்தில் வழிகாட்டிகளாக இருக்கின்றன. அந்த உத்தியோகங்களில் அமர்ந்து சிறுவர்களின் மூளை வீணே கெட்டுப்போவதை இங்குத்தான் சகஜமாய்க் காணலாம். கல்கத்தாவிலுள்ள என். ஆர். ஐயர் கம்பெனியையும், கணிதமேதாவி மிஸ்டர் ராமாநுஜத்தையும் ஏன் பின்பற்றி நடக்கக்கூடாது? யூனிவர்ஸிடிப்பயிற்சிபெற்று இவ்

கள் முன்னுக்குவந்திருக்கிறார்கள்? இது நிற்க; பால்ய விவாகத்தால் எண்ணிறந்த இடைஞ்சல்கள் சிறுவர்களின் வழியில் தடைகல்லாய் நிற்கின்றன. சிறுவர்களுக்குக் குடும்பப் பொறுப்பேகூடாது. கல்வி முறையும் வேரோடு மாற்றப்படவேண்டும். பெற்றோர்களும் ஜனத் தலைவர்களும் புராதனக்கொள்கைகளைப் பிடிவாதமாய் அனுசரித்து வரும் வழக்கம் ஒழிபட்டுப்போகவேண்டும். ஜீவனோபாயத்துக் கென்றே படிப்புச்சொல்லிவைக்கப்படுவதாக எண்ணிச் சிறுவர்களைப் பள்ளிக்கு அனுப்புவது கூடாது. பல வியாதியுள்ள பிள்ளைகளை நான் காலேஜிற் சேர்த்துக்கொள்ள மறுதலித்திருக்கிறேன். ஒவ் வொரு கல்வி ஸ்தாபனத்திற்கும் வைத்திய ஆலோசனைசொல்ல ஒருவர் நியமிக்கப்படவேண்டும். நானும் இந்த ஏற்பாட்டை அனு சரிக்கவாரம்பித்திருக்கிறேன். என்னை உங்களுடைய நண்பராகப் பாவித்து நான் சொல்வதை ஏற்றுக்கொள்ளவேண்டும். இப்போ துள்ள உபாத்தியாயர்களுக்குத் தேவையானவளவு சம்பளம்கொடுக் கப்படவில்லையென்பது பிரசித்தம். பரிசாரகத்தொழில் அதனைவிட மேலானதென்று ஒரு சமயம் நினைக்கும்படியாயிருக்கிறது. இச்சந் தர்ப்பத்தில் நல்ல உபாத்தியாயர்கள் கிடைக்கவில்லையென்று சொல் லிக்காட்டுவதில் அர்த்தமேயில்லை. இப்பிரசினைகளையெல்லாம் பொதுஜனங்கள் நன்காராய்ந்துபார்த்துத் தக்கது செய்வார்களாக.

சுதேசமித்திரன்.

உ

6—11—17.

காளிம்பன்.

தொண்டைமண்டலசதகம்.

இடஞ்சூழுங் காரிகை யாப்பிற் குதாரண மென்றுகொண்டு
விடஞ்சூ ழாவென் றெழுவாயிற் றோற்றி வெறிகமழ்வேங்
கடஞ்சூழ் காடக் கடாக்களிற் றுனியற் காளிம்பன்மேல்
வடஞ்சூ ழெனச்சொன்ன பாமாலையுந் தொண்டை மண்டலமே.

பொழிப்புரை

தமிழ் நிலம்முழுதும்பரவிய, „ காரிகை" யென்னும் யாப் பிலக்கணத்தில் உதாரணமாக எடுத்தாளப்பெற்ற "விடஞ்சூழா"

வென (முற்பகுதியின் முதலடி) முதலாகக்கொண்டும், "வடஞ்சூழெனப்" (பிற்பகுதியின் முதலாகவர) யமகம் பெற்றவனும், சிறந்த திருவேங்கடமென்னும் மலைசூழப்பெற்ற இராஜதானிக்கு இறைவனும்) கடாக்களிற்றினைப்போன்றவனும், விளங்கிய புகழை யுடையவனுமான "காளிம்பன்" தொண்டைமண்டலத்திலுள்ளவன்.

வரலாறு.

இப்பிரபுவைப்பற்றிய விவரமொன்றும் தெரிவதற்கான சாதனமொன்றும் காணப்படவில்லை. தமிழ்நாவலர்சரிதையில், இவன் கம்பருக்குதவிய பசுக்கொடையைப்பற்றிய ஒரு குறிப்புமட்டுமே காணப்படுகிறது. இவனைப்பற்றிய மற்றைய விவரங்கள் தெரியும் வரை கீழ்க்குறிக்கப்படும் வரலாறே சிறந்ததெனக் கொள்ளவேண்டும். இவன் சிறந்தபிரபுவும், கொடையாளியும், சிற்றரசனுமாகவும் விளங்கியிருக்கவேண்டுமென மேற்கூறிய சதகச்செய்யுளாலும், அதன் * மேற்கோட்பாடலாலும் ஊகிக்கஇடமிருக்கிறது. இவ்வளவே அச்செய்யுள்களால் உணரத்தக்கவை. இனி அச்சிறு குறிப்பு அடியில் வருமாறு:—

கம்பர், தொண்டைநாட்டிலிருந்தபோது, சுந்தரமூர்த்தி நாயனர் சங்கிலியாரை மணம்புரிந்ததும், திருவிளக்குத்தொண்டு செய்த கலியநாயனர் ஜன்மஸ்தலமும், முற்றத்துறந்த பட்டினத்தடிகள் முத்தியடைந்ததுமான பலசிறப்புடைய சென்னைக்குவடக்கு 5 மைலிலுள்ள திருவொற்றியூரில், "சதுரானனன் † மடத்திலிருந்த "வல்லி" யென்னும் பெயர்கொண்ட கணிகையொருத்திபாற் காதல்கொண்டு அவள் உபபோகத்தின்பொருட்டு ஒரு மைமகள்

---

* விடஞ்சூழ் முரலி னிடைதுடங்க வில்வாள் வீசி விரையார்வெங்
கடஞ்சூழ் நாடன் காளிம்பன் கதிர்வேல் பாடு மாதங்கி
வடஞ்சூழ் கொங்கை மலைதாங்கம் வடிக்க னில மலர்தாக்தாங்
தடங்கோ ளிரண்டும் வேய்தாங்கா மென்னுங் தன்மைத் தன்னுமையே.

† மூன்றும் ராஜராஜசோழன் தொண்டைநாட்டின்ன திருவொற்றியூர் உற்சவமொன்றுக்குச் சென்றிருந்தபோது சைவமதாசாரியராகிய சதுரானன பண்டிதரும், வாகீசபண்டிதரும், உடனிருந்தனர் என்று ஒரு சாஸனங்கூறுகிறது. (Ep. Rep Of 1911—14) கம்பர் பாராட்டிக் காதல்கொண்ட வல்லியென்பவள் வசித்திருந்தமடம் இச்சதுரானன பண்டிதருடையது போலும்.

பெற்றுவரப் 1 புழற்கோட்டத்துத் 2 திருவேங்கடமென்னும் ஊரில் 3 நிரைக்கூட்டங்களுக்குத் தலைவனும், சிறந்த தியாகியுமாயிருந்த காளிம்பன்பாற் சென்று இவனை அரிய இனிய செய்யுட்பாக்களாற் புகழ்ந்து பாடக் காளிம்பன் பெரிதும் களித்துக் கம்பர் கருதிக் கேட்ப நிரம்பியமடிசுரந்த கன்றுகளோடுகூடிய ஆயிரம் எருமைகளைப் பரிசாகக்கொடுத்தனன் என்ப. இவ்விஷயம் மேற்சுட்டிய "தமிழ்நாவலர்சரிதை"யில், "கம்பர் வல்லிவீட்டுக்கு எருமை வாங்கிவரப்போய்க் காளிம்பன் நிரைமேய்ப்பானைக் கண்டு அவன் மேற்பாட்டுச்சொல்ல, அவன் ஈன்றஎருமை ஆயிரங்கொடுத்தவெண்பா" என்னுந் தலைக்குறிப்பில்,

புக்கு 4விடைதழுவிக் கோடெழுந்த புண்ணெல்லாந்
திக்குலவுபர் காளிம்பன் 5தென்புழன்மா—னக்கணமே
6தோழ்வேது கொண்டிலளாற் 7சந்தரப்பொற் றோன்றலுக்கு
வாழ்வேது கண்டிலமே மற்று (32).

எனக் காணப்படுவதும் இதனை வலியுறுத்தும்.

இங்ஙனம்,
சி. கு. நாராயணசாமி முதலியார்,
கோயமுத்தூர்.

---

1 இது தொண்டைநாட்டிலுள்ள 24 கோட்டங்களுள் ஒன்று.

2 Modern Tirupathi North Arcot

3 பசுமந்தை.

4 விடைதழுவிக்கோடெழுதபுண்—இடையர் முறைப்படி ஏறுதழுவுதலால் உண்டானபுண்.

5 தென்புழன்மான்—தெற்கிலுள்ள புழற்கோட்டத்துப்பெண்.

6 தோழ்வேது—காளிம்பன் கலங்கீண்டியவருத்தம் தீருமாறு அவனது மனைவி அவன்தோட்கு வேதூட்டிலளன்றி அவன் வாழ்க்கை இன்புடைத் தன்று.

7 சுந்தரப்பொற்றோன்றல்—காளிம்பன்.

சுலக்ஷணா.

(384-ம் பக்கத் தொடர்ச்சி.)

"அம்மா கோபித்துக் கொள்ளாதேயுங்கள்" என்றாள் அசிதா விமலாவும் அசிதாவும் சொன்ன மறுமொழியிலிருந்து அவர்களுடைய குணாகுணங்களை வாசகர்கள் அறிந்து கொள்ளலாம்.

சுலக்ஷணா, "எதற்காக ஒட்டுக் கேட்டீர்கள்? சரியான பதில் சொல்லுங்கள்"

அசிதா, "சித்திரம் எழுதுவதற்கு ஒருபடம் எடுத்துக் கொண்டுபோக நாங்கள் இங்கு வந்தோம். அடுத்த அறையில் உரத்த சத்தம் கேட்டது. மதிமானுடைய குரலென்றும் தெரியவந்தது. ஆகையால் நாங்கள் என்ன சம்பாஷணை நடக்கிறதென்று கேட்டுக் கொண்டிருந்தோம்,"

சுலக்ஷணா, "விமலா! நீ ஏன், ஒன்றும் சொல்லாமல் தூரத்தில் போய் நிற்கிறாய்?"

விமலா, "ஏனெனில், இந்த அற்பக் குற்றத்திற்குப் பிரமாதமாய்க் கண்டிப்பதாக எனக்குத் தோன்றுகிறது."

சுலக்ஷணா, "கீழ்ப்படிதலில்லாத பிள்ளைகளையுடைய தாயைப் போல் துரதிஷ்டமுள்ளவர்கள் ஒருவருமில்லை. அசிதா! நீ செய்த தவறுக்காக வருத்தப்படுகிறாய். அதுதான் நல்ல பிள்ளைக் கடையாளம். விமலா! நீ உன்னுடைய அடங்காச்சகோதரனைப் போலிருக்கிறாய். நான் உன் தாய் என்பதையும் இந்த வீட்டிற்கு எஜமாட்டி என்பதையும் யோசித்து, நீ என்னிடத்தில் மரியாதையாகவே நடந்துகொள்."

விமலா, "நீங்கள் பேசுவதைப் பார்த்தால் நான் ஏதோ அபாரக்குற்றம் செய்துவிட்டேனென்று நினைக்க வேண்டியதாயிருக்கிறது."

இந்தச் சமயத்தில் ஐம்பது வயதுள்ள ஒரு ஸ்திரீ விரைவாக் ஓடிவந்து சுலக்ஷணாவைப் பார்த்துச் சொல்லுகிறாள், "என்னால் பொறுக்க முடியாது. நான் இனிமேல் சும்மா இருக்கமாட்டேன் அந்தப் பயல் என்ன பாடுபடுத்துகிறான்?"

சுலக்ஷணா, "கமலினி, ஏன் இவ்வாறுபேசுகிறாய்? சாந்தமாய்ப்பேசு. ஒருவரும் உன்னை அலக்ஷியமாய் நடத்தாதபடி நான் பார்த்துக் கொள்ளுவேன் என்பது உனக்குத் தெரியாதா"

கமலினி, "எப்பொழுதும் அவன் இவ்விதமாகவே நடந்து கொள்ளுகிறான். நான் தங்களுடைய அந்தரங்கத்தாதி என்பதனாலும், இந்த வீட்டில் வெகுகாலமாய் இருக்கிறேன் என்பதனாலும், மதியான் என்னை வெறுக்கிறான். எப்பொழுதும் உதாசினமாய்ப் பேசுகிறான். மாடிப்படியில் அவன் எதிரே வரும்பொழுது என்னால் சீக்கிரம் ஒதுங்க முடியவில்லை. அதற்காக என்னை அவன் 'கிழட்டுப் பிணம்' என்று வைதான். என்னை அவன் மரியாதையாய் நடத்தும்படி அவனுக்குப் போதிக்கிறேன். அந்த நாய்க் குட்டியைச் சும்மா விடுகிறதில்லை."

சுலக்ஷணா, "கவனித்துப் பேசு புவனாலயம் ஜமீந்தாரை இப்படியா பேசுகிறது?"

விமலா, "நான் ஒரு அற்பக்குற்றம் செய்ததற்காக சற்றுமுன் தாங்கள் எவ்வளவு கடுமையாய்க் கோபித்துக் கொண்டீர்கள். இப்பொழுது ஒரு வேலைக்காரி என்ன பேச்சுப் பேசுகிறாள். கேட்டுக் கொண்டேதானே இருக்கிறீர்கள்."

கமலினி, "வேலைக்காரியா? ஆம், வேலைக்காரிதான். நெஞ்சு அஞ்சாமல் இவ்விதமாய் நீ என்னைப்பற்றிப் பேசுகிறாயா? உன்னுடைய சகோதரன் நாய்ப் பயலாயிருப்பது போல நீயும் வீணான உன்மத்தம் பிடித்த சிறுக்கி."

சுலக்ஷணா, "கமலினி! உன் பேச்சை நிறுத்து. விமலா! அசிதா, நீங்களிருவரும் போங்கள். நான் கமலினியுடன் தனியாய்ப் பேசவேண்டும்."

விமலா, "அம்மா, உடனே வேலைக்காரர்களைக் கூப்பிட்டு இவளைக் கல்தாக்கொடுத்து வெளியேதள்ளும்படி செய்யாவிட்டால்—"

சுலக்ஷணை, "போதும், நிறுத்து. நான் சொன்னபடி இந்த இடத்தை விட்டுப்போ."

விமலாவும் அசிதாவும் போனபிற்பாடு சுலக்ஷணையும் கமலினியும் என்ன பேசினார்களென்பதை நாம் இங்குச்சொல்லத் தயாராயில்லை.

குடிசை.

மேலே சொன்ன சம்பவங்கள் நடந்து இரண்டு தினங்களாயின. மதிமான் தன் சிநேகிதன் சூடாமணியின் வீட்டிற்குப்போய், பாலாமணி வசிக்குமிடம் தெரிந்து விட்டதா என்று அவனைக்கேட்டான். சூடாமணி, தன் வேலைக்காரன் பாலாமணி குடியிருக்குமிடத்தைக் கண்டு பிடித்து விட்டானென்று சொல்லி, அவளிருக்கும் தெருவையும் வீட்டின் நம்பரையும் தெரிவித்தான். மறுநாள் மதிமான் பாலாமணி வீட்டிற்கு எவ்விதம் போவதென்று யோசிக்கலானான். நேரே அவள் வீட்டிற்குப் போதல் கூடாதென்று நினைத்துப் பின் வருமாறு அவன் தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்:— "மாறுவேஷத்துடன் போய் அவளைச் சந்தித்துச் சிலநாட்களுக்குள் சம்மதிக்கச் செய்யவேண்டும்."

பாலாமணியின் வீடு நாலைந்து மைல் தூரமிருந்தபடியால் ஒரு வாடகை வண்டியிலேறிக் கொண்டு அவள்வீட்டிற்குக் கால்மைல் தூரத்திற்கப்பால் போய் இறங்கினான். அங்கு ஒருகுடிசை இருந்தது. அது மிகவும் பழமையானதும் இடிந்ததுமாயிருந்தது. மதிமான் அந்தக்குடிசையின் கதவைத் தட்டினான். ஒருஸ்திரீ உள்ளே இருந்து கதவைத்திறந்தாள். அவளுக்குச் சுமார் நாற்பதைந்து வயதிருக்கும். அவளுடைய தலைமயிர் லேசாய் வெளுத்திருந்தது. அவளுடைய முகம் பார்ப்பதற்கு விகாரமாயிருந்தது. அவள் அழுக்குப்படிந்த கந்தல்களை உடுத்தியிருந்தாள். கதவைத் திறந்ததும் மதிமானைச்சற்றுநேரம் உற்றுநோக்கினாள்.

மதிமான், "நான் இந்தப் பக்கத்தில் உலாவிக் கொண்டிருந்தேன். மிகவும் களைப்படைந்திருக்கிறேன். சற்று நேரம் இந்தக் குடிசையில் இளைப்பாற இடங்கிடைக்குமா?"

ஸ்திரீ, "அதோ இருக்கிறதே ஹோட்டல (Hotel) அதிற் போய்த் தங்கலாமே."

மதிமான், "அது இன்னும் அரைமைல தூரமிருக்கிறது. அவ்வளவு தூரங்கூட என்னால் நடக்கமுடியாது. மேலும் அங்கே வேலைக்காரர்கள் முதலிய சாமான்ய ஜனங்கள் தங்குகிறார்கள்."

ஸ்திரீ, "நீ ஏதோ காரியமாய் வந்திருக்கிறாய் போலிருக்கிறது. அப்படியானால் உள்ளேவா," என்று, சற்று நேரம் அவனைக் கூர்மையாய்ப் பார்த்து விட்டுச் சொன்னாள்.

மதிமானும் அந்தஸ்திரீயுடனுள்ளே போனார்கள். அந்தக் குடிசையில் அநேக பாகங்கள் உடைந்து கிடந்தன. கீழே இரண்டு அறையும் மேலே இரண்டு அறையும் அதிலிருந்தன. அந்தஸ்திரீயைத் தவிர வேறொருவரும் அங்கே இல்லை. அவளும் மதிமானும் போய் நுழைந்த அறையில கிழிந்த கோரம்பாயொன்று விரிக்கப்பட்டிருந்தது. உடைந்த நாற்காலியொன்று அங்கே கிடந்தது.

ஸ்திரீ, "இந்த இடத்தைப் பார்த்தாயா? இதில் நீ தாராளமாய் இளைப்பாறலாம். நீ வந்த காரியத்தைப்பற்றி உனக்கு இஷ்டமானபோது சொல்லலாம்.

மதிமான், "நான் ஏதோ காரியமாய் வந்திருக்கிறேனென்று நீ அறிந்து கொண்டாய்., எனக்குச் சில சங்கதிகள் தெரிய வேண்டியிருக்கிறது, நீ அவைகளை எனக்குச் சொல்லவேண்டும்," என்று சொல்லி, ஒரு பணப்பையை எடுத்து அதிலிருந்து ஒரு ரூபாயை அவளிடம் கொடுத்தான். அவள் ஒரு ரூபாயை அற்பமாய் நினைப்பவள்போல் அதை அலக்ஷியமாய் வாங்கிக்கொண்டு, "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டாள்.

மதிமான், "இந்தத் தெருவில் 225-வது வீட்டில் வசிக்கிறது யார்?"

ஸ்திரீ, "எனக்கு அவள் பெயர் தெரியாது. அவள் ஒரு பாலிய மாது."

மதிமான், "மிகவும் அழகாயிருக்கிறாளல்லவா?"

ஸ்திரீ, "ஆம், நான் அவளை இரண்டொரு தடவைகளில் பார்த்திருக்கிறேன். மிகவும் அழகாய்த்தானிருக்கிறாள்."

மதிமான், "அவள் யார்? என்ன தொழிலுடையவள் என்பது உனக்குத் தெரியுமா?"

ஸ்திரீ, "தெரியாது."

"அப்படியானால் நான் வேறு யாரையாவது விசாரித்துக் கொள்ளுகிறேன்" என்று சொல்லிவிட்டு மதிமான் எழுந்திருந்தான்.

ஸ்திரீ "நில்! நானே உனக்கு வேண்டியவற்றையெல்லாம் விசாரித்து நாளைக்குச் சொல்லுகிறேன். மேலும் நீ யோசித்திருக்கும் காரியத்திற்கும் ஒத்தாசை செய்வேன்."

மதிமான், "நான் யோசித்திருக்கும் காரியம் உனக்கெப்படித் தெரிந்தது?"

ஸ்திரீ, "என்னை முட்டாளென்றா நினைத்தாய்? உன்னைப்போன்ற வாலிபர்கள் அழகுள்ள ஸ்திரீகளைப்பற்றி எதற்காக விசாரிப்பார்கள்?"

மதிமான், "சரி, நீ காரியத்தைத் தெரிந்து கொண்டாய். அவளுக்கு எத்தனை வேலையாட்கள் இருக்கிறார்கள் என்றும், அவள் எப்பொழுதாவது தனியே வெளியே போகிறாளாவென்றும், அவளுடைய தாதி லஞ்சம் வாங்கக் கூடியவளா என்றும், நீ விசாரிக்க வேண்டும்."

ஸ்திரீ, "அவளைப் பற்றிய சமாசாரம் முழுவதும் உனக்குத் தெரிய வேண்டும்."

மதிமான், "இந்த விஷயத்தில் கொஞ்சம் வேடிக்கை இருக்க வேண்டும். நான் மாறுவேஷம் போட்டுக் கொள்வதற்குச் சில தாழ்ந்த உடைகள் வேண்டும்."

ஸ்திரீ, "நாளைக்கு அவ்விதமான உடைகளைக் கடையில் வாங்கிவருகிறேன்."

மதிமான், "நான் இங்கே ஒருவாரம் பத்துநாள் தங்கவேண்டுமானல் எங்கே தங்கலாம்?"

ஸ்திரீ, "இஷ்டமானல் இந்தக் குடிசையிலேயே தங்கலாம். நாளைக்கு நான் டவுனுக்கு (town)ப் போகும்பொழுது இரண்டு மூன்று புதுப்பாய்களும் தலையணைகளும் போர்வைகளும் உனக்காக வாங்கிக் கொண்டு வருகிறேன்."

தாழ்ந்த உடைகளும் மற்றைய சாமான்களையும் வாங்குவதற்கு மதிமான் இருபது ரூபாயை அந்த ஸ்திரீயினிடத்தில் கொடுத்தான்.

மதிமான், "எப்பொழுது நீ எனக்கு இந்தச் சமாசாரங்களைத் தெரிவிக்க முடியும்?"

ஸ்திரீ, "நாளைச் சாயந்தரம் அஸ்தமனமானதும்வந்தால், நான் விசாரித்தறிந்ததைத் தெரிவிப்பேன்."

அப்படியே ஆகட்டும் என்று சொல்லி விட்டு மதிமான் ஒரு வாடகை வண்டியிலேறி வீடு சென்றான்.

இனி நாம் அந்தக் குடிசையிலிருந்த ஸ்திரீயைப் பற்றி விசாரிப்போம். அவள் பெயர் காளியாயி அவள் திருட்டுத் தொழிலால் ஜீவனம் செய்து வந்தாள். அற்பக் களவுகளை அவள் தனியே செய்வாள். பெரிய திருட்டுக்களாயிருந்தால், அவளுடைய கூட்டாளிகளான ஆண்திருடர்களைக் கூடச சேர்த்துக் கொள்ளுவாள். மதிமான் போனபிறகு காளியாயி தன் குடிசையை விட்டுப் புறப்பட்டு ஒரு மைல் தூரத்திற் கப்பாலுள்ள ஒரு கள்ளுக் கடைக்குப் போனாள், இன்னும் சில இடங்களில் நாம இக்கடையைப்பற்றிச் சொல்ல வேண்டியிருப்பதால், இங்கு இதைப் பற்றிச் சற்று விஸ்தரிப்போம்,

இந்தக் கடையின் சொந்தக்காரன் பெயர் பேயாண்டி ; அவன்

மனைவியின் பெயர் பேய்ச்சியாயி. ஆனால் அது மருவி, அவள் வழக்கத்தில் பேச்சி என்று அழைக்கப்பட்டாள். அவர்களிருவரும் கள்ளு ச்சாராயங்கள் விற்பதோடு சில்லறை வியாபாரங்களும் செய்து வந்தார்கள். கள்ளுண்பவர்களுக்கு மாம்சஞ் சமைத்து விற்றல், பல சிற்றுண்டிகளைச் செய்து விற்றல் முதலானவைகளும் அவர்களுடைய தொழில்களாயிருந்தன. இதனேடு பேயாண்டி திருட்டு நகைகளைச் சொற்ப விலைக்கு வாங்குவான். சதிபதிகளிருவரும் வயது சென்றவர்கள். அவர்களுடைய வயது ஐம்பதுக்கு மேல் அறுபதுக்குள் இருக்கும்.

பேயாண்டி கடைக்கு வருபவர்கள் பெரும்பாலும் திருடர்களாகவே இருப்பார்கள். காளியாயி அந்த போன சமயத்தில் பேர் போன திருடனை வீரசிங்கமும் அங்கே இருந்தான். அவனுக்கு இப்பொழுது வயது நாற்பத்து மூன்று. காளியாயி தானும் வீரசிங்கமும் சிலவிஷயங்கள் தனியாய்ப் பேசவேண்டுமென்று பேயாண்டியினிடம் சொன்னாள். அவன் அவர்களிருவரையும் ஒரு தனியறையில் கொண்டு போய் விட்டான். கொஞ்சம் கள்ளும், மாம்சமும், சிற்றுண்டிகளும் அவர்கள் முன் வைக்கப்பட்டன. பேயாண்டி அவர்களைத் தனியாய் விட்டுவிட்டுப் போய்விட்டான்.

வீரசிங்கம், "எதற்காகநீ இங்கு வந்தாய்?"

காளியாயி, "ஒரு விஷயத்தைப் பற்றி உன்னிடம் பேசவுதற் காகத்தான்."

இருவரும் அரைமணி நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். பிறகு காளியாயி தன் வீட்டிற்குத் திரும்பினாள். வீரசிங்கம் கள்ளுக்கடையிலிருந்த தன் சினேகிதர்களுடன் வந்து உட்கார்ந்தான்.

மறுபடியும் குடிசை

மறுநாள் சாயந்தரம் எட்டுமணிக்கு மதிமான் காளியாயியின் குடிசையின் கதவைத் தட்டினான். உடனே கதவு திறக்கப்பட்டது. முதல் நாள் பேசிக் கொண்டிருந்த அறைக்குள் காளியாயியும் மதி

மாளும் சென்றார்கள். அந்த அறையில் ஒரு கல்விளக்கு மினுக்கு மினுக்கென்று எரிந்து கொண்டிருந்தது. அந்த விளக்கில் கொஞ்சம் விளக்கெண்ணெய் ஊற்றப்பட்டு; இலுப்பம் பஞ்சினால் திரிசெய்யப்பட்ட திரியொன்று போடப்பட்டிருந்தது. கல் விளக்கின் மங்கலான வெளிச்சத்தில், இருவரும் பேசலாரம்பித்தார்கள்.

மதிமான், "என்ன சமாசாரம்?"

காளியாயி, "எல்லாம் நல்ல சமாசாரந்தான். நேற்றுமாலை அவளுடைய வேலைக்காரியுடன் பேசினேன். அவள் லஞ்சம் வாங்கிக் கொள்வதில் மிகவும் ஆசையுள்ளவளாயிருக்கிறாள். தன்னுடைய எஜமாட்டி ஒரு நாடகக்கணிகை என்று அவள் சொன்னாள்."

மதிமான், "ஆம், அது வாஸ்தவந்தான். அவள் தன்னுடைய எஜமாட்டியைப் பற்றி இன்னும் என்ன சொன்னாள்?"

காளியாயி, "அவள் எப்பொழுதும் தனியாய்த் தானிருக்கிறாளாம். நாடகத்தைச் சேர்ந்த சிலர்தான் அவள்வீட்டிற்கு வருவது வழக்கமாம். மேலும் அவள் அதிகாலையில் ஆறுமணிக்கு உலாத்தச் செல்கிறாளாம்—"

மதிமான், "நல்ல சரியமாயிற்று. நாளைக்கு அவள் போகுமிடத்திற்கு நானும் போகிறேன். மாறுவேஷம் போடுவதற்கு உடைகள் தயாராயிருக்கின்றனவா?"

"அதோ இருக்கிறது" என்று சொல்லி, காளியாயி ஒரு சிறு மூட்டையைக் காட்டினாள்.

மதிமான், "நான் இராத்திரிக்கு சமீபத்திலிருக்கும் ஹோட்டலில் தங்கியிருந்து, காலையில் எழுந்துவந்து மாறுவேஷம் போட்டுக் கொள்ளுகிறேன்."

(தொடரும்.)

வ. வி. நடேசன்செட்டி,

ஆத்தங்குடி.

ஸ்ரீ:

புதுக்கோட்டை ராஜ்யம்.

(392-ஆம் பக்கத்தொடர்ச்சி)

1894-ம் நவம்பர் மாதத்தில் நமது மஹாராஜா அவர்கள் ராஜ்ய மேற்பார்வையை ஒப்புக்கொண்டு ஆள ஆரம்பித்தார்கள். இதற்கு இருபத்தொரு வருஷங்களாகப் புதுக்கோட்டை ராஜ்யம் நல்லமேம்பாட்டை அடைந்திருக்கிறது; அது பின்வரும்.

1899-வருஷத்தில் மஹாராஜா அவர்கள், ராஜ்ய நிர்வாஹத்துக்கு உதவியாக, ஒரு மந்திரியும் ஆலோசனைக் காரருமாகக் கூடியுள்ள ஒரு ஆலோசனை ஸபையை ஏற்படுத்திக் கொண்டார்கள். இந்தஸபை பத்துவருஷகாலங்கள் நடந்தேறிவந்தது. 1909-ம் வருஷத்தில் இந்த ஸபையானது அக்கால மாறுபாட்டுக்குத் தகுந்தபடி சில மாறுபாடுகளையும் அடைந்தது. தர்பாரானது, மாகாணத்துக் கென்று நியமிக்கப்பட்டுள்ள சிவிலியன் ஸூப்பரின்டென்டென்ட் அவர்களும், மந்திரியும் நியாயாதிபதித் தலைவருமாகிய இவர்களுடன் கூடியே ராஜ்ய நிர்வாஹத்தைச் செய்துவர ஆரம்பித்தது. இன்னும் அந்தமுறையே நடந்துவருகின்றது. இம்முறையான ஆளுகையில ராஜ்யமானது பல சீர் திருத்தங்களைப் பல்வகையாலும் பெற்றிருக்கின்றது.

வரவுசேலவு இலாகா:-1886-ம் வருஷத்தில் ராஜ்யத்தின் மொத்தவரும்படியானது ரூ8,95,142 ஆக இருந்தது. 1911-1912-ல் வரிவசூல் மாத்திரம் ரூ17,05,287 ஆகப் பெருகிவந்தது. இந்தக் காலத்தில் பல சமயங்களில் அவசியமாகச் செய்யவேண்டிய பலவகையான நன்மைகளின் பொருட்டுச் செலவு செய்ததுபோக வரிவசூலானது முன்னதற்கும் இரண்டுமடங்காக ஏறியிருக்கிறது. 1892-ம் வருஷத்தில் ஒருவேலிக்கு வருஷவாரி ரூ60-க்கு மேல் மன்னிக்கப்பட்டுவந்தது. 1908-ம் வருஷத்தில் நிலவரியின் சில வகைகளில் சுமார் ரூ30,000 வரையில் மன்னிப்புச் செய்யப்பட்-

டது. 1912-ம் வருஷத்தில் மஹாராஜா அவர்கள், மாட்சிமைதங்கிய சக்ரவர்த்தியவர்கட்கு டில்லியில் நடந்தேறிய மகுடாபிஷேகத்தின் ஞாபகார்த்தமாகத் தமது ராஜ்யத்திலுள்ள செசவு வேலைக்காரர்கட்கு ஏற்பட்டிருந்த வரிகளை நிரந்தரமாகத் தள்ளிவிட்டார்கள். ஆக இக்காலத்து அளவில் வரிகளின் மன்னிப்பாக ரூ50,000 வரையிற் சென்றிருக்கிறதென்றே சொல்லலாம்.

மொத்த வரும்படிப் பெருக்கமாகிய ரூபாய் எட்டரைலக்ஷத்தில் நிலவரி மூன்றரைலக்ஷமும், மற்றக்கடமையில் மூன்றரைலக்ஷமும், காட்டிலாகாவில் அரைலக்ஷமும், பத்திரப்பதிவு, சுங்கம், வராச் சந்திகளின் வரி ஆகிய இவற்றில் அரைலக்ஷமும் கூடியிருக்கின்றன. நிலவரியின் வரும்படியில் ஒன்றரைலக்ஷ ரூபாய்கள், விடுதலைவரியிலிருந்தும், இனும் நிலங்களின்மேல் ஏற்படுத்தியுள்ள சிறு வரியிலிருந்தும், புதிதாகச் சேர்க்கப்பெற்ற நிலங்களின் வரியிலிருந்தும் வசூலிக்கப்பெறுகின்றன. பாக்கியான வரிவசூல்களெல்லாம் ஆங்கில அரசாங்கத்தின் முறையைப்பற்றியேதான் வசூலிக்கப்பெறுகின்றன. இந்தவரிகளும் ஜனங்களின் அமைதியான சௌகரியத்திலிருந்தேதான் வசூலிக்கப் பெறுகின்றன.

1886-ம் வருஷத்து முடிவிற் கணக்கு முடித்துப் பார்க்கும்போது, கவர்ன்மெண்ட் ஸெக்யூரடியாக ரூபாய் 5,00,000 மும், ரொக்கஇருப்பாக ரூபாய் 3,00,000 மும் தாமிருந்தன. இதன்பெருந்தொகையும் மற்றும் இருந்த சேமதனத்தின் பெருந் தொகையும், மாகாணத்திற் கட்டப்பட்டிருக்கிற உயர்ந்த கட்டிடங்கட்குச் செலவிட்டதுபோக, 1894-ம் வருஷத்தில் ஸர் சேஷையா சாஸ்திரியாரவர்கள் விலகிக் கொள்வதற்குச் சில மாதங்கட்கு முன்பாகக்கஜானாவிற் பாக்கியிருந்தது ரூபாய் 3,00,00 தான். சாஸ்திரிகள் விலகிக்கொண்ட பின் நான்கு வருஷங்களாகச் செலவை ஒருவகைப்படுத்த முயன்று வந்தவகையில், 1899-ம் வருஷம் மஹாராஜா அவர்களால் ஏற்படுத்தப்பெற்ற புதிய ஆலோசனை ஸபையால் ஒருவாறுள நிட்டத்துக்குவந்து சேர்ந்தது. பிறகு பத்துவருஷங்களாக அந்த

ஆலோசனை சபையானது மிகக் கவனத்துடன் வேலைசெய்துவந்து, வேர்தருக்கும் மாந்தருக்கும் ஒத்த நன்மையைத் தேடிவந்தது. பிறகு நான்கு வருஷங்கட்குள் நிலவரியில் அதிக வரும்படி கிடைக்கத் தகுந்த ஏற்பாடுகள் தோன்றின. அதனால் 1912-ம் வருஷம் ஜுலை மாதத்து முடிவில் 23,50,000 ரூபாய் ரொக்க இருப்பாகக் காணப்பட்டது. செலவும் அதிகரித்துத்தான் செய்யப் பெற்றது. ஸ்டேட் உத்யோகஸ்தர்கட்கு ஆங்கில ராஜாங்கத்துக்கு ஒத்தபடியான சம்பளமே பெரும்பாலும் ஏற்பட்டுவிட்டது.

தொழில் இலாகா:—இந்நிலைமையில் மாகாணத்தில் தொழிலிலும் வியாபாரத்திலும் அபிவிருத்தியைக் காட்டவேண்டுமென்ற ஒரு நோக்கம்பிறந்தது; ஆனால் அதற்குக்கஷ்டங்கள் அநேகம் இருந்து கொண்டிருக்கின்றன. இந்தியாவின் மற்றமாகாணங்களைக்காட்டிலும் இந்தச் சென்னை மாகாணத்தில் தொழிலபிவிருத்தியைக்காட்டத்தக்க ஸாதனங்கள் அதிகப்படவில்லை யென்று மிஸ்டர் ஆல்ப்ரட் சாட்டர்டன் உத்தேசித்தபடியே இந்த ஸமஸ்தானத்திலும் தற்கால முறைப்படி தொழிலைப்பெருக்கிக் கொண்டுவருவதற்கான ஸாதனங்கள் குறைவாகவே இருக்கின்றன. மாகாணத்திற் பெரும்பாலும் விவசாயமே நிறைந்திருக்கின்றது. ஸமஸ்தானத்தி லிருந்து சிறுபான்மையான பொருள்களே ஏற்றுமதிக்குத் தக்கவைகளாக இருக்கின்றன. ஸமஸ்தானத்தின் பலஇடங்களிலும் காந்தத்தின் தன்மையுள்ள தாதுப்பொருள்கள் அதிகமிருப்பதாகக் காணப்படுகின்றன; என்றாலும், அவைகள் ஒரு இருப்புப்பாதையின் ஸாதனம் ஏற்படும் வரையில் உழைப்புக்குத்தகுந்த பலன் கொடுப்பவைகளாகக்கருதப்படவில்லை. ஸமஸ்தானத்தின் ஒரு சிற்றூராகிய திருவப்பூரிற் செழித்திருந்த கைத்தறித்தொழிலானது, தற்காலம் ஆங்கில தேயத்தின் யந்திரத் தறித்தொழிலுக்கு முன் நிற்கமாட்டாமல் அடங்கி யிருக்கிறது. ஆயினும் அந்தத்தொழில் வினைவினாலும் பலவகையான ஜனங்கள் நன்மை அடைந்து வருகிறார்கள். தர்பார் அவர்கள் இந்தத்தொழிலைப் பெருக்கி ஜனங்கட்கு மிகுதியும் நன்மை செய்துவரப் பிரயத்தனம்செய்துகொண்டிருக்கிறார்கள்.

ஒரு நெசவுக்கல்விச்சாலை ஏற்படுத்தப்பெற்றுச் சிலவருஷங்கள் நன்றாக நடத்தப்பட்டு வந்து, சில கைக்கோளர் வகுப்புப்பிள்ளைகளும் உபகாரச்சம்பளத்துடன் தற்காலமுறைப்படியான நெசவுத்தொழிலைக் கற்றிருக்கிறார்கள். மஹாராஜா அவர்களுடைய பெயரால் ஸ்ரீ மார்த்தாண்ட தொழிற்கல்விச்சாலை என்று பெயரிடப்பட்ட ஒரு சாலையும் பல வருடங்களாக நிலைத்து மாணவர்க்குப்போதித்து வந்தது. இது மராமத்து இலாகா தொழிற்சாலையுடன் சம்பந்தப்பட்டிருந்து, தச்சுத்தொழில் தையற்றொழில் சித்திரத்தொழில் கருமான்றொழில் இவற்றைக் கற்பித்திருக்கிறது. இந்த நகரத்திற் காண்பிக்கப்பெறும் வருஷாந்தப் பொருட்காட்சிக்காலத்தில் நெசவுத்தொழிலிற் கைத்தறியையுபயோகப்படுத்தும்முறையும் பாவோட்டும் முறையும் அநுபவசித்தமாக மாணவர்க்குச் செய்து காண்பிக்கப்பெறுகின்றன. இந்தப்பொருட்காட்சியிற் பலவகையான காட்சிகள் காட்டப் பெறுகின்றன:—

விவசாயம், கைத்தொழில், கல்விமுறை, சித்திரவித்தை முதலியனவும், வேறு பல ஸம்ஸ்தானங்களிலிருந்தும் இந்தியாவின் வேறு இடங்களிலிருந்தும் வரும் வேறு பல காட்சிப்பொருள்களும் வைக்கப்படுகின்றன. இந்தப் பொருட்காட்சிச் சபையும், விவசாய சங்கமும், பிராணிவர்க்கக்காட்சியும், வருஷாந்தரம் நடக்கும் ஆடுமாடுகளின் காட்சியும், இவைபோன்ற இன்னும் சிலசாலைகளும் மஹாராஜா அவர்களால் நன்றாகப் பராமரிக்கப்பெற்று வருகின்றன. இந்தப் பொருட்காட்சியைப்பற்றிச் சமீபத்தில் டைம்ஸ் ஆப் இந்தியா பேபரில் எழுதப்பட்டிருந்ததின் சுருக்கத்தை இங்குச்சொல்லாமலிருக்கமுடியவில்லை. “சென்னை ராஜதானியின் புதுக்கோட்டை ஸம்ஸ்தானத்திற் சமீப காலத்தில் நடந்தேறிய பொருட்காட்சியானது மற்ற ஸம்ஸ்தானக்காட்சிகளிலும் சிறப்புற்று விளங்கியிருந்தது. கைத்தொழில் விவசாயம் இவற்றின்காட்சிகள் மிகவும் வியக்கத்தக்கனவா யிருந்தன. ஏற்கனவே, இந்தமாகாணத்திற் குழந்தைகட்குப் புஷ்டிப்புவளைக் அதிகரித்திருந்தது. இப்போது ஸமஸ்தானம், கல்விச்சங்கத்தாருடைய தகுந்தகவனத்தினால் மாணவர்கள் தம்

தொகையிலும் தொழிலிலும் அதிகப்பெருக்கத்தைக் காட்டியிருக்கின்றது. நிலவரியும் வரிவசூல்களும் சமீபத்தில் அதிகப்பட்டு ஸமஸ்தானத்துக்குச் செல்வப்பெருக்கைத் தந்துகொண்டிருக்கின்றன. ஒரு உயர்தரக் காலேஜூம், ஒரு பெண்மக்கள் பள்ளிக்கூடமும், ஒரு கைத்தொழிற்சாலையும் ராஜதானி நகரத்தில் உண்டாக்கப்பட்டிருக்கின்றன."

இருப்புப்பாதை:—இந்த முறைகளெல்லாம் அவ்வப்முறையிலாகவேண்டிய கல்விப் பெருக்கத்தைக் காட்டியுள்ளனவேனும், அவைகள் பலனளிக்கப்போதுமான சௌகரியங்கள் இன்னும் அநுபவமுறையில் ஏற்படுத்தப்படாத ஒரு குறையிருக்கிறது. இவைகளிலிருந்துண்டாகும் பயனைச் சீக்கிரம் சேருதேவிரமானால், இந்த ஸமஸ்தானத்துக்குள் ஒரு இருப்புப் பாதையின் போக்குவரவு அவசியம் ஏற்பாடாக வேண்டியிருக்கிறது. இது ஏற்பாடானால் இத்தமுறைகள் இன்னும் பெருகிவரும் என்பதற்கு யாதும் சந்தேகம் இராது. தர்பார் அவர்கள் தமது ஆதீன காலமாகிய இந்த இருபத்துமூன்று வருஷங்களாக இந்தஸமஸ்தானத்தில் ஒரு இருப்புப்பாதைச் சௌகரியத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு ஆங்கில அரசாங்கத்தாரிடம் கேட்டுக்கொண்டுவருகிறார்கள். இந்தக் கேள்வி ஏகாதிபத்தியத்தின் எல்லா இந்தியப் போக்குவரவு ஸாதனசங்கத்தாரிடம் சங்கதே ஆலோசிக்க வேண்டியிருத்தலால் தாமதமாகிக் கொண்டுவருகிறது. கூடியவிரைவில் இந்தக்குறையும் நிவிருத்தியாகிவிடும் என்று கருதப்படுகின்றது.

இந்த ஸமஸ்தானத்துப்பூமிகளெல்லாம் பெரும்பாலும் வானத்தை எதிர்பார்த்துள்ளனவாக இருத்தலால், சிலசமயங்களில் மழைக்குறைவால் உண்டானபஞ்சத்தை யநுசரித்து, ஒரு பஞ்ச நிவாரண பண்டும் இந்தச்சமஸ்தானத்தில் ஏற்படுத்தப்பட்டு அதற்கு மூலதனமும் சேகரிக்கப்பட்டிருக்கிறது. ஏரிப்பாய்ச்சலின் விஷயமாக நல்லேற்பாடும் வெகு சீக்கிரத்தில் உண்டாகலாகும்.

பத்திராதிபர்.

கீழச்செவல்பட்டிக் கொலைக்கேஸ் தீர்ப்புகள்.

கொஞ்சகாலத்துக்குமுன் இராமநாதபுரம் ஜில்லாவைச்சேர்ந்த கீழச்செவல்பட்டியில் நடந்த கொலைக்கேஸின் விவரம் யாவரும் அறிந்ததே. அந்தக் கேஸின் சம்பந்தமா யேற்பட்ட மதுரை செஷன் கோர்ட்டுத் தீர்ப்பும், சென்னை ஹைக்கோர்ட்டுத் தீர்ப்பும் கீழேகாட்டப்பட்டுள்ளன.

15-8-17-ல் மதுரை ஸெஷன்கோர்ட்டுத் தீர்ப்பு.

		வருஷம். தண்டனை.	ஷரா
1.	ராம. சிவலிங்கம்	தூக்கு.	
2.	ஆ. கருணைக்கிளங்கு	24.	
3.	அ. சின்னவீரன	5.	
4.	செ. காண்டாமிருகம்	7.	
5.	ஒ. கல்யாணி		விடுதலை.
6.	க. எச்சிக்கலைக் கல்யாணி	24.	
7.	க. கூனன் பழனி	7.	
8.	க. பெரியசம்பிளை		விடுதலை.
9.	கா. கல்லுகுட்டி		விடுதலை.
10.	சி. குருவாவிராமன்		விடுதலை.
11.	பெரி. தெக்குத்திராமன்		விடுதலை.
12.	ஒ. க. பழனி		விடுதலை.
13.	அள. வீரன்		விடுதலை.
14.	ராம. முத்துப்பாலன்		விடுதலை.
15.	பழ. சின்னகொண்டான் அண்ணாமலை		விடுதலை.
16.	சொ. சாமிநாதன்		விடுதலை.
17.	ராம. பெரியசாமி	தூக்கு.	

16-10-17ல் மதராஸ் ஹைக்கோர்ட்டு அப்பீல்தீர்ப்பு:—

1.	க. கூனன்பழனி	7 வருடம்.
2.	செ. காண்டாமிருகம்	7 வருடம்.
3.	அ. சின்னவீரன்	2 வருடம்.
4.	ஆ. கருணைக்கிளங்கு	தீபாந்தரம்.
5.	க. எச்சிக்கலைக்கல்யாணி	தீபாந்தரம்.
6.	ராம. பெரியசாமி	தூக்கு.
7.	ராம. சிவலிங்கம்	தூக்கு.

மதுரையில் தூக்கு நாள் 20-11-17.

பிங்கள௵ கார்த்திகைமீ ௫௳.

௨

கண்ணாடி செய்யும் முறை.

கண்ணாடி அல்லது பளிங்கு, சிலிகா ஆல்காலி என்னும் இரண்டுவஸ்துக்களும் அநேகமாக உஷ்ணத்தால் கலந்து உண்டாகும் ஒருபொருள். கண்ணாடியின் முக்கியமான அம்சம் என்னவெனில்: அது உருகியிருக்கும்போது வஜ்ரம்போல ஒட்டிக்கொள்ளும் ஒரு விதபுதுமையான குணத்தை யடைகிறது. அக்குணத்தினால் அது ஓர் குழாயின் முனையைச்சுற்றித் திரண்டு ஒட்டிக் கொள்ளுகின்றது. குழாயின் மற்றொருபக்கமாக ஊதினால் உட்பக்கமாக விசாலித்ததுபோலாகிறது. அப்போது எந்த வுருவமாகவாவது அளவாகவாவது செய்துகொள்ளலாம். குளிர்ந்தபோது கடினமாய்விடுகிறது. உடைந்துபோகும் குணத்தையும் அடைகிறது. உஷ்ணமாயிருக்கும்போது எந்தப் பிரகாசமான அல்லது மழமழப்பான தோற்றத்தை அதில் உண்டாக்குகிறோமோ அத்தோற்றத்தை அது எப்போதும் உடைத்தாயிருக்கிறது. கண்ணாடிக்கு எந்த நிறத்தையாவது உண்டாக்கலாம். உருவங்களைப் பிரதிபலிக்கும்படியும் செய்யலாகும்; சீதோஷ்ணஸ்திதி அதிற் கேட்டை யுண்டுபண்ணுவதில்லை, காலக்கிரமத்தாலும் அவை அழிவதில்லை.

செய்யப்படும் கண்ணாடி தவிர ஒருவிதமான சுதேசக் கண்ணாடி, அக்கினி பர்வதங்களின்சமீபத்திற் சில வேளைகளிற் கண்டு பிடிக்கப்படுகின்றது. அக்கினிபர்வதத்தின் எரிபொருள்கள் குளிர்ந்தபோது கண்ணாடியாகிறதென்று சொல்லுகிறார்கள். இந்தக் கண்ணாடியை ரஸாயன பரிசோதனைசெய்ததில் அலுமினியம் இரும்பு பொடாஷ் அல்லது சோடா முதலியவற்றின் எரிந்த கிட்டமெனக் கண்டுபிடித்தார்கள். இது, முதன்முதல் எத்யோபியா தேசத்தில் ஆப்ஸிடியாஸ் என்பவரால் கண்டுபிடிக்கப்பெற்றது என்று யாத்திரைக்காரரும் பேர்போன பூர்விகசரித்திரக்காரருமான ப்ளினி என்பவர் சொல்லுகிறார்.

பூர்விக சரித்திரக்காரர்கள் இந்தியாவிற் பளிங்குச்சாமான்கள் ஏராளமாக இருந்ததாகச் சொல்லுகிறார்கள். ஈஜிப்திலே கண்ணாடித் தொழில் ஆச்சரியமான விருத்தியை அடைந்திருந்து, அக்காலத்தில் கண்ணாடியால் அநேக உருக்கள் உண்டாக்கியிருக்கிறார்கள் என்று தெரியவருகிறது. அவைகள் பூமியிற் புதைக்கப் பெற்றிருந்து இப்போது வெளியில் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிற் சில அதில் தொழிற்றிறமையையும், பூரணத்தையும் காட்டி நிற்கின்றன. அவ்வேலைப்பாடுகளிற் சில இக்காலத்திலும் கூட மீறப்படாமல் இருக்கின்றன.

தொழில்.

வைத்தியக் குறிப்புகள்.

மலபந்தத்திற்குப் பழச்சாறு.

மலபந்தத்தினால் சிசுக்களுக்கு அநேகவிதமான வியாதிகள் வருவது ஸஹஜம். வாந்தியாவது, வயிற்றுப் பொருமல், பசியின்மை, மந்தக்கட்டி, இசிவு முதலியவைகளாவது உண்டாவதற்குப் பெரும்பாலும் மலபந்தமே காரணமாகின்றது. இதைப் போக்குவதற்குத் தீக்ஷண வீர்யமுள்ள பேதி மருந்துகளைச் சிறு குழந்தைகட்குக் கொடுப்பது விவேகக் குறைவென்றே சொல்லவேண்டும். ஒருமாதம் முதல் 3-வது மாதம் வரையில் தினந்தோறும் கமலாக் கிச்சிலியின் சாற்றை இரண்டொரு தேக்கரண்டி யளவு குழந்தைக்குக் கொடுத்தால் மலபந்தம் உண்டாவதில்லை. பசியும் நன்றாய் உண்டாகி உணவும ஜீர்ணமாகும். இரண்டாவது அல்லது மூன்றாவது மாதம் முதற்கொண்டு அத்திப் பழச்சாறு, அல்லது கமலாக் கிச்சிலியின் சாறு 2-முதல் 4 தேக்கரண்டி அளவு வீதம் கொடுத்து வரலாம். அத்திப் பழச்சாறு குழந்தைகட்கு மிக்க உபயோககரமான தீபன ஔஷதமாகும்.

Family Dootor.

பற்களைச் சுத்தம்செய்ய அடுப்புக்கரி.

கொஞ்சம் சுத்தமான அடுப்புக்கரியை நன்றாகப் பொடிசெய்து அதைக்கொண்டு பல்துலக்கினால் பற்கள் வெண்மையாகக் காணப்படுவதுடன், அவற்றின் துர்நாற்றமும் விலகும்.

வைத்தியகலாநிதி.

செந்தமிழ்ச்சிறப்பு.

இது, மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் உதவிக் காரியதரிசியும், ஆங்கிலம், தமிழ் என்னும் உபயபாஷா பண்டிதரும் ஆகிய N. V. சுந்தரராஜையரவர்கள் B. A., L. T. இயற்றியச்சிட்டுள்ள ஒரு அருமையான நூல். இந்நூல் 117 நேரிசை வெண்பாக்களாலாகியது. செய்யுட்களெல்லாம் இனிய ஓசையும், பொருளாழமும் உடையவையாயிருக்கின்றன. ஆசிரியர் முதலில் விநாயகர், திருமால், சிவபெருமான், முருகக்கடவுள், அங்கயற்கண்ணம்மை, கலைமகள், தமிழ்த்தெய்வம் என்னும் எழுவரையுந் துதித்துக்கொண்டு நூலைத்தொடங்கி, ஆங்கிலம் கற்றோர் தமிழை அநாதரவுசெய்யலாகாதென வற்புறுத்தியதன்பின்னர்ச் செந்தமிழின்சிறப்பையும், அதனைப்பாதுகாத்துவரும் சேதுமன்னர் முதலியவர்களின் சிறப்பையும், வித்துவான்களின் சிறப்பையும் கூறியிருக்கின்றார். ஒவ்வொரு மனிதனுக்கும் தேசாபிமானமும், பாஷாபிமானமும் வேண்டுமென்பது இவ்வாசிரியரின் கொள்கையாகும்.

இந்நூல் செந்தமிழ் 15-ம் தொகுதி 1, 2 பகுதிகளில் முன்னே பிரசுரிக்கப்பெற்றிருப்பினும், நண்பர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி ஐயரவர்கள் இதனைத் தனிப் புத்தகரூபமாகவும் இப்பொழுது அச்சிடுகின்றார்கள். ஆதலால், கூடிய சீக்கிரத்தில் தக்க வித்துவான்களின் மதிப்புரைகளுடனும், சாந்துகவிகளுடனும் வெளிவரும்.

அ. கோபாலையர்.

மேன்மை.

சாதிக் கிழிதொழிலைச் செய்யாமை தான்மேன்மை
ஞாதிக்கு மேன்மை நடுநிலைமை—ஓதின
மடவார்க் கடக்கம் மகாமேன்மை மாந்தர்க்
கடாமை விடலமேன்மை யாம். (1)

ஆமேகான் மேன்மை அறிவாளர் சொற்கேட்டல்
நாமேதான மேவர்த்தனை நாக்கிதென்னை—பூமேலே
சொலலாமை மேன்மை உயிர்பிறந்தக் காக்காமை
எலலா விதத்துமேன்மை எண். (2)

எண்ணிப் பிறர்கடக்க யாம்கடத்த லேமேன்மை
கண்ணிற்கு மேன்மை கருணையே—மண்ணிடையே
வெஃகாமை மேன்மை விரும்பும் படிஎல்லாம்
அஃகாமை மேன்மை யறம். (3)

அறமார் நினைவே அனைவோர்க்கும் மேன்மை
திறமார் மதியுடையோர் சேர்க்கை—உறநாடித்
தேர்ந்துகொளல் மேன்மை சிறிதேனு மின்சொல்லே
ஓர்ந்துரைத்தல மேன்மை யுணர். (4)

ஸ்ரீ. கி. ஸ்ரீநிவாசமுதலியார்,
ஆனைமலை.

20—11—17.

சபைநிகழ்ச்சிக் குறிப்புகள்.

கோநகர்.

"ஞானசம்பந்தநற்சபை"

இதன் மாதாந்தரக்கூட்டம் பிங்கள௵ ஐப்பசிமீ ௩௨ (19—10—17) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4½ மணிக்குக் கூடிற்று. சபையோர்வேண்டு கோட்கிணங்கி க. வி. கலாசாலைத் தலைமையாசிரியர் பிரம்மஸ்ரீ அ. கோபாலையரவர்கள் தலைமைவகித்தார்கள். கலாசாலைமாணவர்களாற் கடவுள் வாழ்த்துக் கூறப்பெற்றது.

பின்பு க. வி. கலாசாலை உதவியுபாத்தியாயர் ஸ்ரீ G. இராமஸ்வாமி ஐயங்காரவர்களாலும், ஷை கலாசாலை மாணவர் திருநீலகண்டம் என்பவராலும், ஷை கலாசாலை மாணவன் திருஞானசம்பந்தனென்பவனாலும், ஷை கலாசாலை உதவித்தமிழாசிரியர் ஸ்ரீ S ஆழ்வாரையங்காரவர்களாலும் முறையே 'கல்வி' 'ஆறுவதுசினம்' 'இளையான்குடி மாறநாயனார் சரித்திரம்' 'தமிழ்க்கவிகளின் நயங்கள்' என்னும் பிஷைகள் உபந்யஸிக்கப் பெற்றன.

பின்பு, தலைவரவர்கள் ஒவ்வொரு விஷயத்திற்கும் விரிந்த அபிப்பிராயங் கூறி யாவரையும் மகிழ்வித்தார்கள், கலாசாலைமாணவன் சு. மு. பழனியப்பனால் யாவருக்கும் புஷ்பசந்தனாதிகள் வழங்கப்பெற்று இரவு 8 மணிக்குச் சபை பூர்த்தியாயிற்று.

ஞானசம்பந்தன்.

மேலைச்சிவபுரி.

சன்மார்க்க சபை.

இவ்வூரின்கண்ணுள்ள சன்மார்க்க சபையின் ஐப்பசிமாதக் கூட்டம் இருமொழிப் புலமையு மொருங்கமையப் பெற்ற வித்வான் ஸ்ரீமான் கதிரேசச் செட்டியாரவர்கள் அக்கிராசனத்தின் கீழ் 26-10-17-ல் நடைபெறு மென்று பிரகடனஞ் செய்திருந்தார்கள். ஸ்ரீ ௵ ஸ்ரீ கதிரேசச்செட்டியாரவர்கள் சில அசௌகரியங்களால் வரக்கூடாமையைத் தெரிவித்தபடியால், சன்மார்க்க சபையி னோரங்கமாகிய கணேசர்செந்தமிழ்க்கலாசாலைத் தலைமைப் போதகாசிரியர் ஸ்ரீமத் கந்தசாமியாரவர்கள் அக்கிராசனம் வகிக்க, 3 மணிக்குச் சபை கூடிற்று. ஷை சபைக் காரியதரிசிகளிலொருவராகிய ஸ்ரீமாந் குமரப்ப செட்டியாரவர்கள், பாரதம் அருச்சுனன் தவநிலைச்சருக்கத்திற் சிற்சில செய்யுள்களிலமைந்துகிடந்த சித்தாந்தசாத்திர நுண்பொருணலங்களை யாவரும் வியக்கும் வண்ணம் கூறி முடித்தார்கள். பின்னர்ச் சன்மார்க்கசபைக் கணே

சர் செந்தமிழ்க் கலாசாலையிற் பண்டித பரீட்சைக்குக் கல்வி பயிலும், மாணவர் ஸ்ரீரங்கராமானுஜ தாஸரவர்கள் 'தருமம்' என்னும் விஷயத்தைப் பல பாகுபாடு செய்துகொண்டு மிக அழகாகப் பேசி முடித்தார்கள். பின்னர்ச் சன்மார்க்க சபையி னங்கமாகிய கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் எப்பொழுதும் ஒரு மாணவர் உண்டியுறையுள் முதலியன பெற்றுக் கல்வி பயிலவேண்டுமென்று மகிபாலன்பட்டி எ. மு. ப. நடராஜச்செட்டியாரவர்கள் ஆயிரத்திருநூறு ரூபா நன்கொடையாக அளித்த பெருநன்றியை ஷெ. சபைக்காரியதரிசி குமரப்பசெட்டியாரவர்கள் வியந்து பேசியதோடு எம்நாட்டில் வதிதரும் தனவைசிய மக்கள் இப்பெருந்தகையாளரைப் போல ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாணவர்கட்கு உண்டியுடை முதலியவற்றிற்குப் பொருளுதவி செய்வராயின் நந்தமிழ்மொழி பண்டைக் காலத்தைப்போலச் சீரும் சிறப்புமெய்தித் திகழ் தருமென்று பேசி முடித்தார்கள்.

பின்னர்ச் சன்மார்க்கசபை நிரந்தர அக்கிராசனாதிபதியாகிய ஸ்ரீமாந் அண்ணாமலைசெட்டியாரவர்கள், 'சன்மார்க்கசபை அபிவிருத்தி கருதி நன்கொடையாகப் பெருந்தொகை கொடுத்துதவிய ஸ்ரீமான் நடராஜச்செட்டியாரவர்கட்கு யானும் சன்மார்க்க சபையாரும் நன்றிபாராட்டுவதோடு, இவர்கள் இன்னும் இத்தகைய தருமங்களை நம்நாட்டிற் செய்துவர எல்லாம் வல்ல பரமேசுரனை வந்தித்துச் சிந்தித்து வணங்குகின்றேன்' எனக்கூறி முடித்தார்கள். பின்னர் அக்கிராசனாதிபதியவர்கள்எழுந்து ஒவ்வொரு பிரசங்கங்களுக்கும் முடிவுரை கூறிச் சன்மார்க்கசபைக் கல்லூரியிற் கல்விபயிலும் மாணவர் செலவிற்கு மூலதனமாகப் பெருந்தொகையை நன்கொடையாக உதவிய ஸ்ரீமாந் நடராஜ செட்டியாரவர்கள் வள்ளற்றன்மையைப் புகழ்ந்து பேசியதோடு, இக்காலத்திற் கேற்றதருமம் கல்வி யபிவிருத்திசெய்தலேயாமென்றும், இங்ஙனமே ஒவ்வொரு தனவைசியமக்களுக் தம்மாலியன்ற பொருளுதவி செய்யின், 'பலதுளி பெருவெள்ள' மென்னும பழமொழிபோலப் பலமாணவர்கள் உயர்தரக் கல்வி கற்றற் கேதுவாகுமென்றும், இதனால் நந்தேயம் ஐரோப்பா முதலிய தேயங்களைப் போலக் கல்வி வளம்பெற்று முன்னேற்ற மடையுமென்றுங் கூறி முடித்தார்கள். பின்னர்க் கடவுள்வாழ்த்துக் கூற மாலை ஆறுமணிக்குச் சபை பூர்த்தியாயிற்று.

காரியதரிசி.

சன்மார்க்கசபை,

மேலைச்சிவபுரி.

இந்திரகுலாதிபசங்கத்தின்
5-வது வருஷ மகோத்ஸவம்.
(4—11—17)

இவ்வருட மகோத்ஸவம் தஞ்சைஜில்லா அம்மாபேட்டை பக்கத்தோட்டத்தில், பூண்டி ஸ்ரீமான் ராவ்பகதூர் வி. அப்பாசாமி வாண்டையார் அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் அவர்களது மூத்தகுமாரர் ஸ்ரீமான் வி. அ. விஜயவாண்டையார் அவர்களது கன்முயற்சியால் மிக்க விமரிசையாக நடைபெற்றது. இந்திரகுலத்தவராய புதுக்கோட்டை பிரின்ஸ் ஸ்ரீமான் கிருஷ்ணசாமி துரைராஜா அவர்களும், பாப்பாநாடு ஜமீன்தார்-கண்டர்கோட்டை ஜமீன்தார்-நெடுவாசல் ஜமீன்தார் முதலிய ஜமீன்தார்களும், உக்கடை ராவ்பகதூர் ஸ்ரீமான் அண்ணாசாமித்தேவர் அவர்கள்- அரித்துவாரமங்கலம் ஸ்ரீமான் வா. கோபாலஸ்வாமி ரகுநாத ராஜாளியார் அவர்கள் முதலிய மிராசுதார்களும், இன்னும் பல ஜில்லாக்களிலுள்ள இந்திரகுலத்துப் பிரமுகர்களும், மற்றும் சபை அபிமானிகளும், ஜனோபகாரன், நீலலோசனி, கமலாசனி இம்மூன்று பத்திராதிபர்களும், மெயில் ரிப்போர்ட்டரும், ஹிந்து, டைம்ஸ், நியூஇந்தியா, செந்தமிழ்ச்செல்வி, வித்யாபாநு முதலியபேபர்களின் காஸ்பாண்டெண்டுகளும், ஆக 10000-த்திற்கு மேற்பட்ட ஜனங்கள் வந்து நிறைந்திருந்தனர். திருவாரூர் ஸ்ரீமத் சுப்பையா தேசிகர் அவர்களால் தமிழ்வேத பாராயணமும் ராஜவாழ்த்தும் இன்னிசைக்கருவியுடன் ஓதப்பெற்றன. வந்தனோபசாரப்பத்திரமும், அறிக்கைப்பத்திரமும், "இந்திரகுலத்தவரும் அக்குலத்தவர் கடமையும்" என்ற வியாஸமும் இந்திரகுலாதிபசங்கத்தலைவரும், ஸ்தாபகருமான ஸ்ரீமான் வா. கோபாலஸ்வாமி ரகுநாதராஜாளியார் அவர்களால் வாசிக்கப்பெற்றன.

அவற்றின் சாராம்சம் வருமாறு:- இந்திரகுலமெனின்:- இந்திரன்வழிவந்தகுலம் இந்திரனைவழிபடுங்குலம், இந்திரனது சிறப்புடைக்குலம், இந்திரனது (ஆளும் வன்) தொழிலுடைக்குலம் க்ஷத்திரியகுலம், தலைமைக்குலம் என அறுவகையாகப் பொருள்படும். இவ்வாறும் சோழனுக்கும் அவன் வழியினராகிய கள்வருக்கும் பொருந்தும். இந்திரகுலமென்பதும் கள்வர்மரபென்பதும் ஒருபொருள்குறித்த இருதொடர்மொழிகள், அவற்றுள், ஒன்று ஆரியம்; மற்றொன்று தமிழ். இந்திரனது வழித்தோன்றல் சோழனென்பது புராணேதிகாசங்களிற் பிரசித்தம். கலிகாலப் பெருவளவன் என்னும் சோழன் இந்திரனது அவதாரம்

என்று பிரம்மாண்ட புராணத்துள்ள தென்காஞ்சிப்புராணம் 2-வது காண்டம் கவேரத்துப் படலத்திற் கூறப்பட்டிருக்கின்றது. அதனுலேயே ஒட்டக்கூத்தரியற்றிய குலோத்துங்கசோழன்பிள்ளைத்தமிழில் "புரந்தர குலதர" என அவனை விளித்திருக்கின்றது. அவன் இந்திரவழிபாடுசெய்ததை சிலப்பதிகார முதலிய நூல்களிற் காணலாம். மால் (கருமை) என்னும் பெயர் சோழனுக்கும் இந்திரனுக்கும் நிறம்பற்றிவந்தது.

ஆகண்டலன் (இந்திரன்) போலப் பகைவரைக் களைபவன், க்ஷத்திரியன் தலைவன், என்பன கலிங்கத்துப்பரணி, மூவருலா முதலியவற்றிற் படிக்கப்பட்டிருக்கின்றன. டாக்டர் பர்னல் பேலியாக் வாயிலும், மிஸ்டர் வெங்கசாமி ராவ் டிஸ்திரிக்ட் மானியூலிலும் சோழரைக் கள்வரெனவே கூறுகின்றனர், சிலாசாசனங்களும் அதனை ஆதரிக்கின்றன. சோழன் வழியினர் காஞ்சியையாண்ட தொண்டைமானென்று மணிமேகலையாதி நூல்களும், அத்தொண்டைமான் வழியினர் புதுக்கோட்டை யாசரென்று இங்கிலீஷ் சரித்திரங்களும் கூறுகின்றன. அவர் கள்வரென்பது யாவருமறிந்த தொன்று. தாழ்ந்தவர் முதல் உயர்ந்தவர்வரையில் என்பதைக் குறிக்கும், தோட்டிமுதல் தொண்டைமான் வரையில் என்ற தமிழ்நாட்டுப் பழமொழியும் இங்குக் குறிக்கத்தக்கது, "கள்வனென் கிளவி கரியோ னென்ப" எனத் திவாகரரும், 'கள்வனென் கிளவி கரியனடுச் சொல்வோன்' எனப் பிங்கலரும் 'எள்ள விழையப் புல்லப் பொருவக், கள்ள மதிப்ப வெல்ல வீழ, வென்றா கெட்ட பயனிலையுவமம், எனத் தொல்காப்பியனாரும் கூறுதலானும், ஐங்குறுநூற்றுக்கள்வன்பத்திற் கரிதல்காரணமாக நண்டுக்குக்கள்வன் என்னும்பெயர்வழக்குண்மையாலும், கள்வன் என்னும் பதத்திற்குக் கருநிறமுடையோன், நடுச்சொல்வோன், கீழ்ப்படியச்செய்பவன், களைபவன் என்னும் அர்த்தங்கள் உள்ளன. "கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான், மழபுலம் வணக்கிய மாவண் புல்லி" யெனச் சங்கவிலக்கியமாகிய அகநானூறு முதலியவற்றிற் புகழ்ந்தோதப்பெற்ற புல்லி முதலாய நல்லரசர்பலர் இக்குலத்திற்றோன்றிப் பார்புரந்து பகைவரைக்களைந்தும், அரசுரிமையில்லார் நாட்டின்தலைமைவகித்து நடுச்சொல்லியும் வந்தகாரணத்தால், காரையணைப் பேரரசமக்கள், உலகுடையார், தனித்துவென்றார், நாட்டாண்மைக்காரர், அம்பலகாரர் முதலியபட்டங்கள் அவர்களுக்கு இன்றும் வழங்கிவருகின்றன. உயர்ந்தாரிழிந்தாராம் எச்சாதியாரேனும் பிறரை வஞ்சித்துப் பொருள் கவர்வரேல், அவரையும் கள்வர் என்பது வழக்காதலான், திருட்டுத் தொழில் பற்றி வழங்கும் கள்வர் என்னும் அப்பெயர் சாதிப்பெயராகாது. கொல்லர் என்னுஞ் சொல் கொலைசெய்பவரெனப் பொருள்படுமாயினும் ஜாதியைக் குறிக்குமிடத்துக் கொற்றொழிலுடையார் எனவே பொருள்படுதலும், மறவர்

என்னுஞ் சொல் பாவிகள்எனப் பொருள்படுமேனும் ஜாதியைக் குறிக்குமிடத்து வீரரெனவே பொருள்பயத்தலும், யாதாமொன்றைப் பார்ப்போர் எனப் பொருள்படுமேனும் ஜாதியைக் குறிக்குமிடத்துப் பார்ப்பார் என்னும் சொல் வேதத்தைப் பார்ப்பார் என்று பொருள்பயத்தலும் காண்கின்றோம்; ஆதலால், கள்வர் என்னுஞ் சொல்லுக்கு ஜாதியைக் குறிக்குமிடத்துக் களைதற்றொழிலுடையார் எனப் பொருள் கோடலே பொருத்தமுடைத்தாம். அவர்கள் வேதப்பிரதிபாத்தியமான தெய்வங்களாய விஷ்ணுவைக் காத்தற்றொழிலுடைமையிற் காத்தா னென்றும், அவரது திருத்தேவியார்களாகிய இலக்குமியைப் பொன்னி யென்றும், பின்னைப் பிராட்டியைச் சின்னி யென்றும், சிவனைத் திரிபுர மெரித்தலால் தீந்தா னென்றும், பார்வதியைக் கருநிறமுடைமையின் அங்காளி யென்றும், அவ்வம்மையின் கணவராகிய நடராஜனைக் கூத்த னென்றும், தினைப்புனங்காத்த வள்ளியைக் காத்தாயி யென்றும், அவள் கணவனாகிய சுப்பிரமணியனைக் காத்தவனாய னென்றும், கிருஷ்ணனைக் கறுப்ப னென்றும், பலராமனை நிறம்பற்றி வெள்ளைய னென்றும் தமிழ்ச் சொற்களால் வழங்குகிறார்கள். அத்தெய்வங்கட்குச் சைவம், வாமமென்னுமிருவகை வைதீக வழிபாட்டிற் பாற்பொங்கல் முதலிய சைவ வழிபாடும், கண்ணப்ப னொப்பதோர் அடியாரை முன்னடியான் என்ற பெயரால் பிரதிட்டித்து அவர்களுக்கு உவப்பாகப் பலியாதி வாமபூஜையும் செய்துவருகிறார்கள்.

ஜனத்தொகையில் மிகுத்த இவர்கள் தமிழ்நாடெங்கும் பரந்து வாழ்ந்துவருகிறார்களெனினும், இவர்களில் நூற்றுக்கு எழுவரே தமிழ்படித்தவராகவும், ஆயிரத்துக்கு ஒருவரே ஆங்கிலங்கற்றவராகவும் ஜனகணிதத்திற் கணக்கிடப்பட்டிருக்கிறார்கள். இவர்களிற் பாலர் வகுப்பிற் படிக்கும்பிள்ளைகளும் படிக்கத் தெரிந்தவர்களாகக் கணக்கிடப்பெற்றிருக்கிறார்களெனில், இவர்கள் படிப்பில் எவ்வளவு பின்னடைந்தவர்களென்பதும், எவரும் முன்னேற்றமடைவதற்குக் கல்வியே காரணமென்பதும், மற்றவர்கள் முன்னிற்பதும் அதனாலென்பதும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகின்றதல்லவா? ஆகையாற் கல்வியபிவிருத்திக்காக இந்திரகுலாதிபர் அறப்பள்ளி அறக்கூழ்ச்சாலையுடன் அமைக்கப்படவேண்டுமென்றும், அதற்காக மகா ஜனங்களிடத்தும், அரசாங்கத்தாரிடத்தும் பொருளுதவி பெறவேண்டுமென்றும், பின்னும் அவர்களது அபிவிருத்தியைக்குறித்த பலமார்க்கங்களையும் விரிவாயெடுத்துரைத்தனர். உடனே கலைதெரி கழகத்திற்காக ரூ. 5000-த்துக்கும் வருடச்சந்தா ரூ. 150-க்கும் கையொப்பம் வாங்கப்பெற்றது. கலைதெரிகழக நிர்வாகசபைக்குப் பதினறுவர் அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப்பட்டனர். பிரின்ஸ் ஸ்ரீமான் கிருஷ்ணசாமி துரைராஜா அவர்களும், பூண்டி ஸ்ரீமான் ராவ்பகதூர் வீ. அப்பாசாமி

வாண்டையாரவர்களும், கண்டர்கோட்டை ஜமீன்தார் ஸ்ரீமான் ராஜகோபால பண்டாரத்தார் அவர்களும் ஷெ சங்கத்தின் கௌரவத் தலைவர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

இந்திரகுலாதிபர் குறைகளைப்பற்றிக் கனம் இந்தியாமந்திரியவர்களுக்கும், கனம் இராஜப் பிரதிநிதியவர்களுக்கும் எழுதியமனுவை விவரித்து யாவரும் அங்கீகரித்தவுடன், பிரின்ஸ் ஸ்ரீமான் கிருஷ்ணசாமிதுரைராஜா அவர்கள், பாப்பாநாடு ஜமீன்தார் ஸ்ரீமான் ராய்பகதூர் சுவாமிநாதவிஜயத்தேவரவர்கள், பூண்டி ஸ்ரீமான் ராவ்பகதூர் வீ. அப்பாசாமி வாண்டையார் அவர்கள், உக்கடை ஸ்ரீமான் ராவ்பகதூர் அண்ணாசாமித்தேவரவர்கள், அரித்துவாரமங்கலம், ஸ்ரீமான் வா. கோபாலஸ்வாமிரகுநாத ராஜாளியார் அவர்கள் இவ்வைவர்களும், நேரிற் கொடுப்பதற்கு டெபுடேஷன் கமிட்டி மெம்பர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். நம்மவரின் ஒற்றுமை என்றவிஷயம் நாகை நீலலோசனிப் பத்திராதிபர் ஸ்ரீமான் ஜி சதாசிவம்பிள்ளையவர்களாலும், இந்திரகுலாதிபர் சங்கமும் அங்கத்தினர் ஊக்கமும் என்றவிஷயம் ஸ்ரீமான் P. வல்லான் தேவரவர்களாலும், இந்திரகுலமுங் கல்வியுமென்றவிஷயம் M. கோவிந்தராஜ நாட்டார் அவர்களாலும், கேள்வி யென்றவிஷயம் ஸ்ரீமான் மு. தெண்டாயுதபாணிக்காடவராயரவர்களாலும், பள்ளிக்கூடங்கள் என்றவிஷயம் ஸ்ரீமான் மு. வேங்கடசாமி நாட்டாரவர்களாலும் வியாசங்களாக வாசிக்கப்பெற்றன. நம்சக்ரவர்த்தியவர்களுக்கும் நேசதேச அரசர்களுக்கும் ஜயமுண்டாகும்படிக்கும் நீண்டஆயுளைக்கொடுக்கும்படிக்கும்பிரார்த்தித்துச் சபாநாயகரவர்களுக்கும் மற்றவர்களுக்கும் வந்தனங்கூறித தமிழ்வேத பாராயணஞ்செய்து சபைகலைந்தது.

G. வாசுதேவநாயடு,

முக்சாலைக்காரியதரிசி,

ஸ்ரீ கோபாலசுவாமிமடம்,

அரித்துவாரமங்கலம்.

நாட்டரசன் கோட்டை,

வித்யாபரிபாலனசங்கம்.

பிங்கள௵ ஐப்பசி௴ 30௳ (15-11-17) மாலை 5-மணிக்குச் சிவகெங்கை வக்கீல் பிரம்மஸ்ரீ P. S. இராமசாமி ஐயரவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள்

சிவகெங்கை சாமவேதம் பிரம்மஸ்ரீ "சுந்தரசாஸ்திரிகள்" "தர்மம்" என்ற விஷயத்தை உபந்யசித்தார்கள். பிறகு ஸ்ரீ உ. வே. இராமையங்காரவர்கள் ஸ்ரீமான் உ. வே சீதாராமையங்காரவர்கள், ஸ்ரீமான் சுப. வெள்ளைவாரணம் பிள்ளையவர்கள் ஆகிய மூவரும் மேற்கண்ட உபந்யாஸத்தைப்பற்றி சரிதமே உபந்யசித்தார்கள். பிறகு "ஆறுவதுசினம்" என்ற விஷயத்தை சிவி. லெ சிவ சுப்பிரமணியன் சிவி. பெரி. ராமஸாமி என்ற மாணவர்கள் நன்கு உபந்யசித்தார்கள். பிறகு அக்கிராசனாதிபதியவர்கள் உபந்யசித்த விஷயத்தையும் உபந்யாஸகர்களையும் புகழ்ந்தும் மாணவர்கள் இம்மாதிரி உபந்யசிப்பது வித்தை முன்னேற்றமடையும் வழியென்றும் தமது நல்லபிப்பிராயத்தை வெளியிட்டுப் பேசினார்கள். இரவு 9-மணியோடு சங்கம் சிறப்பாய் நிகழ்ந்தது.

கோசகர்.

ஞானசம்பந்த நற்சபை.

இதன் மாதாந்தரக்கூட்டம் நிகழும், பிங்கள஥ு கார்த்திகைமீ ௩௨ (18-11-17) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4½-மணிக்குக் கூடிற்று. சபையோர் வேண்டுகோளின்படி, காரைக்குடி, கம்பராமாயணப் பிரசாரகர் ஸ்ரீ மோ. வெ. கோவிந்தராஜ ஐயங்காரவர்கள் அக்கிராசனத்து வீற்றிருந்து முகவுரை கூறிய பின்னர்,

(1) பலவான்குடி, சித்திவிநாயக வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் ஸ்ரீ வீ. குமாரவீரையரவர்களால், 'காலத்தின் அருமை' என்னும் விஷயமும்,

(2) ஷெயூர் ஸ்ரீமான் ராம. கு. ராம. ராமசாமிச்செட்டியாரவர்களால் 'மனிதப்பிறப்பின்பயன்' என்னும் விஷயமும்,

(3) சொக்கலிங்கம் புத்தூர், மாணிக்கவாசக வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் ஸ்ரீ செ. இராமமூர்த்தி ஐயரவர்களால் 'இயல்வதுகரவேல்' என்னும் விஷயமும், வெகு அழகாகவும், கேட்போர் மகிழும் வண்ணமும் உபந்யசிக்கப் பெற்றன.

அக்கிராசனாதிபதி அவர்கள் ஒவ்வொரு உபந்யாசங்களிலிருந்தும் ஸாராம்சங்களை யெடுத்துரைத்து முடிவுரையுங் கூறினார்கள். யாவருக்கும் வந்தனோபசாரமும், ஹாரசந்தன தாம்பூலாதிகளும் வழங்கப்பெற்று மங்கலவாழ்த்து கூற இரவு 8½-மணிக்குச் சபை பூர்த்தியாயிற்று.

சம்பந்தன்.